ISSN 2012 - 6700
இதழ் - 09

# பூங்காவனம்



திருமதி. யோகேஸ்வரி சிவப்பிரகாசம்

கலை இலக்கிய சமூக சஞ்சிகை

Best Queen Foundation வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments From:-

FIVE STAR TEXTILES CENTRE

WHOLESALE & RETAIL TEXTILE DEALERS

No. 95, 2 nd Cross Street, Colombo - 11, Sri Lanka.
Tel :- 011 2441810, 2345280, 2441809
Fax :- 94 - 1 - 2345184 / 2582453
E-mail :- shafeeka@sltnet.lk

With Best Compliments From:-

M.S.M. MASHOOR HADJYAR

Address : No. 16, Ediriveera Avenue, Dehiwala, Sri Lanka.
Mobile : 077 3235543










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Best Queen Foundation
வெளியீடு

# பூங்காவனம்

இதழ் 09 - 2012 ஜூன்
ISSN 2012 - 6700

**ஆசிரியர் குழு**

றிம்ஸா முஹம்மத்
எச்.எப். ரிஸ்னா
டப்ளியு.எம். வஸீர்

**ஆலோசகர்**

ஏ.சீ. ஜரீனா முஸ்தபா

**வங்கித் தொடர்புகளுக்கு**

Commercial Bank,
Mount Lavinia Branch,
Best Queen Foundation,
A/C No :- 8930016177.

என்ற இலக்கத்திற்கு காசை வைப்பிலிட்டு அதன் பற்றுச்சீட்டை அனுப்ப வேண்டும். காசுக் கட்டளையாயின் (M.F. Rimza - Dehiwala Post Office) என்று குறிப்பிட்டு அதற்கான பற்றுச் சீட்டையும் அனுப்ப வேண்டும். காசோலையாயின் குறுக்குக்கோடு இடப்படாத காசோலையை M.F. Rimza எனக் குறிப்பிட்டு அனுப்பவும்.

தனிப்பிரதி - 80/=
தபால் மூலம் - 100/=
வெளிநாடு - 2.5$

**தொடர்புகளுக்கு**

"Poongavanam"
21 E, Sri Dharmapala Road,
Mount Lavinia,
Sri Lanka.

**Email:-**
bestqueen12@yahoo.com

**Website:-**
www.bestqueen12.blogspot.com

**Phone:-**
0094 (0) 77 5009 222
0094 (0) 71 9200 580

புதிய ஆக்கங்களும், இச்சஞ்சிகை பற்றிய விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன. நூல் விமர்சனத்துக்கு அனுப்புபவர்கள் நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும்.

படைப்புகளுக்கு படைப்பாளிகளே பொறுப்பு. செவ்வைப்படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.

# உங்களுடன் ஒரு நிமிடம்...

அன்புள்ளம் கொண்ட பூங்காவனம் வாசகர்கள் அனைவரையும் இதழ் ஒன்பதினூடாக சந்திப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம். இறைவனின் கருணையாலும், வாசக உள்ளங்கள், விளம்பரதாரர்களின் மேலான பங்களிப்புக்களாலும் பூங்காவனத்தின் ஒன்பதாவது இதழ் வெளியிடப்படுகிறது.

இன்று உலகம் விஞ்ஞானத்தோடு இணைந்து இயங்கிக் கொண்டிருக்கிறது. பட்டணங்களில் மாத்திரம் பரவியிருந்த தொழில்நுட்ப வளர்ச்சி இன்று பட்டி தொட்டியெங்கும் வியாபித்துள்ளது.

வியக்கத்தக்க இந்த மாற்றங்களால் நாம் மகிழ்ச்சியடையும் அதே நேரம் அதனால் ஏற்படும் விளைவுகளை சற்று சிந்தித்துப் பார்ப்பது அவசியமாகின்றது. கணனி, கைத்தொலைபேசி, தொலைக்காட்சி என்ற ஆடம்பரப் பொருட்கள் எல்லாம் இன்று அத்தியாவசியப் பொருட்களாகிவிட்டன. பற்பல நன்மைகள் இதனால் இருந்த போதிலும் தீயவற்றின் பால் உலகம் சரிந்திருப்பது வருந்தத்தக்க விடயமாகும்.

கல்வியை மறந்து கேளிக்கைகளிலும், ஆபாசங்களிலும் ஈடுபடும் மாணவர் பற்றி தினமும் அறியக்கிடைக்கிறது. முந்திய தலைமுறையினர், தமது ஓய்வு நேரங்களை ஓடியாடி விளையாடி கழித்த காரணங்களால் உடலுக்கு பயிற்சியளிக்கும் பொழுதுபோக்காக அவை காணப்பட்டன. ஆனால் இன்றைய காலத்தவர்கள் இணையத்தின் பேஸ்புக்கிலும், தொலைக்காட்சியின் தொடர் நாடகங்களிலும் தங்களது நேரத்தைக் கழிப்பதுடன், கைத்தொலைபேசியில் நீண்ட நேரம் உரையாடவும் செய்து நேரத்தை வீணே போக்கிவிடுகிறார்கள். அதனால் மின்கதிர்களின் (Rays) தாக்குதல்களுக்கு உள்ளாகி பெயர் தெரியாத புதிய நோய்களுக்கும் ஆளாகிறார்கள்.

கர்ப்பிணிப் பெண் ஒருத்தி இவ்வாறு பாதிக்கப்பட்டால் வயிற்றிலுள்ள சிசுவும் பாதிக்கப்படுகின்ற பரிதாபம் நிலவுகின்றது. அதுபோன்றே பாதிப்புக்குள்ளாகும் அவர்கள் மாத்திரமன்றி அவர்களின் குடும்பத்தவர்களும் மனதளவில் பாதிக்கப்படுகிறார்கள். எனவே நமக்கென செய்து தரப்பட்ட வசதிகளை ஆரோக்கியமான விதத்தில் பயன்படுத்த வேண்டும். அதற்கான சிறந்த வழிமுறைகளை நாம் அனைவரும் ஒன்றிணைந்தே முன்னெடுக்க வேண்டும்!!!

- ஆசிரியர் குழு





# பூங்காவினுள்ளே


## நேர்காணல்

திருமதி. யோகேஸ்வரி சிவப்பிரகாசம்

## கவிதைகள்

வெலிப்பண்ணை அத்தாஸ்
பி.ரி. அஸீஸ்
சீனா. உதயகுமார்
பதுளை பாஹிரா
யோ. புரட்சி
த. சிவசுப்பிரமணியம்
மன்னார் அமுதன்
ஜுமானா ஜுனைட்
எல். வஸீம் அக்ரம்
நிலாக்குயில்

## சிறுகதைகள்

சுமைரா அன்வர்
எஸ்.ஆர். பாலசந்திரன்
சூசை எட்வேட்
ஏ.சி. ஜரீனா முஸ்தபா

## உருவகக்கதை

மருதூர் ஜமால்தீன்

## கட்டுரைகள்


கவிஞர் ஏ. இக்பால்
சந்திரகாந்தா முருகானந்தன்
கா. விசயரத்தினம்
நாச்சியாதீவு பர்வீன்

## வாசகர் கடிதம்

## நூலகப்பூங்கா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நேர்காணல்

**சந்திப்பு :**
**வெலிகம ரிம்ஸா முஹம்மத்**
**தியத்தலாவ எச்.எப். ரிஸ்னா**

**உங்களின் குடும்பச்சூழல், வாழ்வுநிலை பற்றி கூறுங்கள்?**

எனது தந்தையாரின் பெயர் சின்னத்துரை. தாயாரின் பெயர் கமலாம்பிகை. நான் மலேசியாவில் 1948 ஆம் ஆண்டு பிறந்தேன். எனக்கு இரு மகள்மாரும் ஒரு மகனும் இருக்கிறார்கள். இரு பெண் பிள்ளைகளுக்கும் திருமணமாகி இரு பேரப்பிள்ளைகளும் இருக்கிறார்கள். நான் மக்கள் வங்கியில் முகாமையாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்றுவிட்டேன்.

**எழுத்துத்துறைக்குள் தாங்கள் காலடி எடுத்து வைக்க முன்னோடியாக இருந்தவர்கள் பற்றி?**

சிறு வயதில் கதைகள் கூறி அதில் ஒன்றவைத்த என் பேரனாரைத்தான் முதல் காரணகர்த்தாவாகச் சொல்வேன். அடுத்துப் பல சஞ்சிகைகளை வாங்கி தானும் வாசித்து, என்னையும் வாசிக்கப் பழக்கிய என் தாயார். தமிழில் ஆர்வங்கொள்ள வைத்த எனது தமிழாசிரியர் வித்துவான் நவரத்தினம் அவர்கள். எனது ஆரம்பகால எழுத்துகளை வெளிவரச்செய்து ஊக்கமளித்த திரு. வ.இராசையா, திரு. மனோகரன் மயில்வாகனம், திரு. இ.சங்கர் முதலியோரைக் குறிப்பிடலாம்.



**சிறுகதைகள் எழுத வேண்டும் என்ற ஆவல் உங்களுக்கு ஏற்பட்டதற்கான காரணம் என்ன?**


சிறுகதைகளை வாசித்து வந்த எனக்கு நானும் எழுதினால் என்ன என்றோர் எண்ணம்





இயல்பாகவே ஏற்பட்டது. வேறு குறிப்பிடத்தக்க சம்பவம் எதுவும் நடந்ததாக நினைவில்லை.

**சிறுகதைத் துறையில் ஈடுபட்டுவரும் நீங்கள் இதுவரை எத்தனை தொகுதிகளை வெளியிட்டிருக்கிறீர்கள்? அவை யாவை?**




இதுவரை நான்கு சிறுகதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளேன். தற்போது 'இன்னும் பேசவேண்டும்' என்னும் ஒரு தொகுதியை வெளியிட ஆவன செய்துகொண்டிருக்கிறேன். ஏற்கனவே வெளியிட்ட சிறுகதைத் தொகுதிகள் உணர்வின் நிழல்கள் (1997), ஈன்ற பொழுதில் (1999), கணநேர நினைவலைகள், மனம் விந்தையானதுதான் (2006) ஆகியனவாகும்.

இவற்றைவிட அரை நிமிட நேரம் என்னும் ஆன்மிகக் கட்டுரைத் தொகுதி, உனக்கொன்றுரைப்பேன் (2009) என்னும் பெண்களுக்கு அறிவுரை கூறும் கடித இலக்கியம், நடைச்சித்திரத் தொகுப்பான எண்ணிலாக்குணமுடையோர் (2010), சமயம் சார்ந்த முன்னோர் சொன்ன கதைகள் (2011) ஆகிய எனது ஆக்கங்களையும் இருபாலைச் சேனாதிராய முதலியாரின் ஆக்கங்களின் தொகுப்பு ஒன்றினையும் வெளியிட்டுள்ளேன்.

**தாங்களின் ஆரம்பகாலப் படைப்புகளுக்கும், தற்போதைய படைப்புகளுக்கும் இடையில் எவ்வகையான வித்தியாசங்களை உணர்கிறீர்கள்?**

அதிகமான வித்தியாசங்களை அவதானிக்கிறேன். ஆரம்பகாலக் கதைகளில் சிறுபிள்ளைத்தனமான எழுத்து, வாழ்வின் அனுபவங்கள் குறைவாகப் பிரதிபலிப்பது எனப் பல குறைகளைக் கூறலாம். இன்றைய எனது எழுத்திலும் எனக்கு முழுமையான திருப்தியில்லை. மேலும் சிறப்பாக எழுதியிருக்கலாமே என்றே எண்ணுவேன்.

**இதுவரை கிடைத்த விருதுகள் பற்றி?**

பெற்ற விருதுகளாக - சார்க் மகளிர் அமைப்பு (ஸ்ரீ லங்கா) சிறுகதை (தமிழ்) முதற்பரிசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனகசெந்தில் கதாவிருது, சிரித்திரன் சுந்தர் விருது, தகவம் பரிசு, பூபாள ராகங்கள் பரிசு போன்றவற்றைக் கூறலாம்



**சிறுகதைகளில் யதார்த்தமான விடயங்கள் உள்ளடக்கப்படுகின்ற போதுதான் அது முழுமையாகின்றது என எண்ணுகின்றீர்களா?**

நடைபெறுகின்ற நிகழ்வுகள் கருவாக அமையும் வேளையில் யதார்த்தமாக இருக்கவேண்டும் எனக் கூறினாலும் சில அதீத கற்பனைகள் கதைகளாகும் போது அங்கு யதார்த்தத்தைக் காண்பது இயலாது. உதாரணமாக எனது காத்திருப்பு என்ற கதை, இங்கு போர் உச்ச கட்டத்தில் இருந்தபோது எழுதப்பட்டது. அதில் போர் முடிந்த பின்னர் யாழ்ப்பாணம் வேகமாகப் புனரமைக்கப்படுவதைக் கற்பனை செய்திருக்கிறேன்.

வெளிநாடு சென்றவர்கள் போட்டியிட்டு மீள வருவதாகக் கற்பனை செய்திருக்கிறேன். கற்பனை மெய்ப்படவேண்டும் என்ற கதையிலும் 2000ஆம் ஆண்டிலேயே அற்புதமான ஒரு யாழ்ப்பாணத்தைக் கற்பனை செய்தேன். இன்னும் அவை யதார்த்தமாகவில்லை. எனவே நான் உங்கள் கூற்றை ஒப்புக்கொள்ள முடியாதல்லவா? இதே போன்று விஞ்ஞான ரீதியாக எதிர்காலத்தில் நிகழப்போகும் நிகழ்வு ஒன்றைக் கருவாகக் கொண்டு எழுதப்படும் கதைகளையும் கூறலாம்.

**சிறுகதைகளுக்கான கருப்பொருளை எவ்வாறு பெற்றுக் கொள்கின்றீர்கள்?**



நாளும் பொழுதும் வாழ்க்கையில் சந்திக்கும் ஏதோ ஒன்று அடிமனதைத் தொட்டு மறக்கமுடியாத ஒன்றாகிப்போய் அதை எழுதித்தானாகவேண்டும் என்ற உந்துதலோடு கதையாகிறது. இப்படியில்லாமல் எழுதிக்கொடுக்க வேண்டும் என்பதற்காக எழுதுபவை கனதியற்றுப் போவதாய் நான் உணர்வதுண்டு.

**சிறுகதைகள் என்றால் அவற்றில் முக்கியமாக எந்தெந்த அம்சங்கள் இடம் பெற வேண்டும் என்று சொல்லுங்கள்?**





நான் எழுதும்போதுகூட இந்தக் கதைக்கு இந்த இந்த அம்சங்கள் அமையவேண்டுமென எதையும் வரையறுத்துக்கொள்வதில்லை. இலக்கணத்தின்படி இலக்கியம் அமையவேண்டுமென வரையறுக்கக் கூடாதென்றே நான் நினைக்கிறேன்.



**சிறுகதைகளின் இன்றைய போக்கு பற்றிய உங்கள் கருத்து யாது?**

பல நல்ல சிறுகதைகள் வெளிவருகின்றன. ஆனால் பல்வேறு காரணங்களால் போதிய முதிர்வடையாதவையும் இடம்பிடித்துக் கொள்கின்றன. தேக்க நிலையைவிடப் பின்னோக்கிச் செல்கின்றோமோ என்ற அச்சமும் சிலவேளைகளில் தலை நீட்டுகின்றது.

**எவ்வகையான புத்தகங்களை அல்லது யாருடைய புத்தகங்களை அதிகமாக நீங்கள் வாசிக்கிறீர்கள்? ஏன்?**

தற்போது நான் சமய நூல்களையே விரும்புகின்றேன். வயோதிபம் காரணமாகவிருக்கலாம்.

**வளர்ந்து வரும் சிறுகதை எழுத்தாளர்களுக்கு தாங்கள் கூற விரும்புவது என்ன?**

எல்லோரும் கூறும் ஒன்றுதான். முதலில் நிறைய வாசியுங்கள். உங்கள் கதையைப் பட்டை தீட்டி ஒளிரச் செய்யுங்கள். பத்திரிகை பிரசுரிக்காது விடுவதால் உங்கள் கதை தரமற்றது என்றெண்ணி நம்பிக்கையிழந்துவிடாதீர்கள். அவர்களாலும் வரும் கதைகள் எல்லாவற்றையும் வெளியிடவியலாதுதானே. தொடர்ந்து முயலுங்கள். வெற்றியடைவீர்கள்.

**இறுதியாக என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்?**

தாங்கள் என்னைப் பேட்டி காண எண்ணியது எனக்கு வியப்பைத் தந்தது. இச்சந்தர்ப்பத்திற்கு முதலில் நான் நன்றி கூறுகிறேன். அடுத்து சஞ்சிகை நடத்துவது சவால்மிக்கதாக இருக்கும்போது அதில் காலூன்றி இலக்கியப்பணி புரியும் தங்களுக்கு மனமார்ந்த வாழ்த்துகள்!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய் ஆவாள் பெண்

- வெலிப்பண்ணை அத்தாஸ்

பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்த குழந்தையைத்
தொட்டிலாட்டும் கை நாடாளும் கை என்பதனால்
தாய்மைக்கு நிகரேது? உயர் ஸ்தானத்தில்
தன் மகவை உயர்த்தி வைத்து ஏற்றம் தருபவள் தாய்

தாய்மையடைதல் பெண்ணுக்கு உயர்வு தருவதாம்
அரசனாயினும் தாய்க்கு மகனே எனும் கூற்றும்
அத்தகைய உயர் நிலையில் தாயின் மதிப்பைக் கூறுவதாம்
அதனாலன்றோ பெண் என்றால் பேயும் இரங்கும் என்றனர்

தாயின் பாதத்தடியில் சுவர்க்கம் இருக்கிறது என்பது நபிமொழி
தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை என்றே
தாய்க்கு முதலிடம் கொடுத்தாள் ஔவை பிராட்டி
பெண் என்றால் பேதமை என்பது மூடர் கூற்று
பெண் இல்லை என்றால் ஆண்வர்க்கம் தோன்றிடுமா?

பெண்மைக்கு முதலிடம் தந்தாக வேண்டும்
பெண் என்பவள் தாய் ஆகி தன் உதிரத்தை பாலாய் மகவுக்கு
பருகக்கொடுத்து கண்ணெனக் காத்ததனால் சமுதாயம்
உருவாகி உயர்ந்தோங்க வைத்தவள் பெண்ணே ஆவாள்

ஒவ்வொரு பெண்ணும் தாயானவள் தன்னைத் தொடரும்
நிழல் எனக்கண்டு குழந்தையைப் போற்றிக்காத்து உருவாக்குகிறாள்
ஒவ்வொரு மகவும் இவ்வாறு உருவாகியமை நினைந்து
ஒவ்வொரு உவமைப் பெண்ணால் தன்னை ஏற்றிப் போற்றி
அவ்வுயர்வை அவர்க்களித்து மகிமை செய்தல் அனைவர்க்கும் கடனே!!!





# மூன்றாவது திருமணம்

**சிறுகதை**

மல்லவபிட்டி சுமைரா அன்வர்

'காவேரிய பார்த்தியா மீனு?'

'ம்.. நெறமாசமா இருக்கிறா இல்ல. அவக்கென்னப்பா மூனாவது முடிச்சாலும் புளியங்கொம்புதாண்டி தேவி'

'அதுன்னா உண்மைதான். அந்த அதிஷ்டம் எல்லோருக்கும் வாய்க்குமா மீனு?'

'கலியாணம் முடிக்கிறதே நெறைய பேருக்கு கனவா, போராட்டமா இருக்கு. ஆனா காவேரி கொடுத்து வச்சவள்'

'ஆமாடி. அதனால தானோ என்னவோ பெரிய நினைப்பும் கூடிடுச்சி. நம்மைக் கண்டதும் காணாத மாதிரி ஒரு திமிர்ல காரில ஏறினாளே. எனக்கு பத்திட்டு வருது...'

இந்த உரையாடல்கள் திரும்பத் திரும்ப காவேரியை பாடாய்ப் படுத்தியது. அவளுள் எதிரொலித்துக்கொண்டேயிருந்தது. அவளால் தாங்க முடியவில்லை. அழுது தீர்த்தாள்.

'ஹாய் காவேரி. பங்ஷனெல்லாம் எப்பிடி? வீட்டில எல்லோரும் உன்ன ரொம்ப கவனிச்சிருப்பாங்களே' என்றவாறு ஆர்வத்தோடு காவேரியருகே வந்த தோழி ரோஜா காவேரியின் முகத்தைக் கண்டு அதிர்ச்சியுற்றாள்.

'ஏய் என்னாச்சி? என்ன இது? இவ்ளோ அழுதிருக்கிறாய்? சொல்லும்மா' பரிவோடு கேட்டவாறு காவேரியைத் தன்னோடு சாய்த்து அணைத்துக்கொண்டு காவேரியின் தலையை நீவியபடியே கேட்டாள் ரோஜா.

அவளது பரிவும் பாசமும் இன்னும் காவேரியின் அழுகையைப் பெருக்கியது. விம்மினாள். வெடித்தாள். அழுது தீர்த்தாள். ரோஜா பொறுமையாக இருந்தாள். சிறிது நேரம் கழிந்தது. காவேரி தன்னை ஆசுவாசப்படுத்திக்கொண்டாள்.

'ரோஜா என்னப்பத்தி உனக்கு எல்லாம் தெரியும்தானே? நான் ஆட்டக்காரியா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமை பிச்சவளா? நானா எனக்கு மூன்று கலியாணம் வேணும்னு அழுதேன்? அடம் பிடிச்சன்? சொல்லு ரோஜா?'

மீண்டும் கங்கை கரை புரண்டது. 'உன்னை யாரும்மா புண்படுத்தினாங்க? என்ன நடந்திச்சிடா?'

'ரோஜா நானும் திவாகரும் எப்படி அன்பா வாழந்தோம்னு உனக்கு தெரியும்தானே?

ஆழமான அன்பு.. அருமையான வாழ்க்கை.. சடுதியா குருவிக்கூடு குண்டு பட்டு சிதறின மாதிரி, சுனாமி என் திவாகரை பறிச்சிடுச்சி. நான் பைத்தியமானேன். மூனு வருஷமா பயங்கர தபசியா.. உலகையே வெறுத்து ஒதுங்கினேன். திவாகரின் நினைப்பையும், அவருடன் வாழ்ந்த வாழ்வையும் நெட்டுருப்படுத்திக் கொண்டிருந்தேன்.

என் அம்மாதான் 'நீ இளம்பெண். வாழ வேண்டியவள்னு' சதா நச்சரித்து நிர்ப்பந்தமா மோஹித்த என்னோட வாழ்க்கைத் துணையாக்கினாங்க. அப்போ நான் துடித்த துடி நீ கண்ணால பார்த்ததுதானே? மோஹித்தும் அருமையா, அன்பா என்னோடு வாழ்ந்தாலும் அவரோடு மனமொப்பி என்னால வாழ முடியலயே. பொம்மக் கல்யாணமா ஒரு வருஷம் பேருக்கு வாழ்ந்தோம்.

என்னால அவரோட வாழ்க்கையும் பாழாகுதுன்னு நானே ஒதுங்கிக் கொண்டேன். அவருக்கு ஒரு வாழ்க்கைய அமைச்சிக்க வழிவிட்டேன். இனிமேல் கல்யாணமே வேணாம். சாகும் மட்டும் இப்படியே இருந்திட்டுப் போறேன்னு இருந்தேன்.

காலம் இன்னும் சில வருஷங்கள கடத்திச்சி. எனக்கு பக்கபலமா இருந்த ஒரே உறவு என் அம்மா. அவங்களும் என்னப் பற்றிய கவலையில ஒரேயடியா படுத்தப் படுக்கயாயிட்டாங்க. அந்த நிலையிலயும் அவங்க தன்னப் பத்தி யோசிக்காம, என்னப் பத்தியே நினைச்சி நினைச்சி வேதனையையும், நோயையும் கூட்டிக்கிட்டாங்க.

மறுபடி கல்யாண நச்சிப்பு. நான் சூழ்நிலைக் கைதியானேன். நிர்ப்பந்தம்.. நிராதரவு.. மரணப் படுக்கையில் இருக்கின்ற அம்மாவின் ஆறுதலுக்காக இயந்திரமானேன். தயாள் என் வாழ்க்கைத் துணையாகிட இசைந்தேன்.

திவாகருக்குப் பிறகு இன்னொருவருடன் வாழ்றதே எனக்கு குற்ற உணர்வு. அது தவிர திவாகரோட சந்தோஷமா சுத்தித் திரிஞ்ச இடமெல்லாம் இப்ப எனக்கு வெறுமையா இருக்கு. அதோட அங்கெல்லாம் தலைகாட்டவே பிடிக்கல்ல. வேதனை என்ன வாட்டி வதைக்குது.

நான் திவாகரோட வாழ்ந்த அன்பான வாழ்க்கை.. மகிழ்ந்த சூழல்.. பழகிய





உறவுகள் எல்லாம் இன்று எனக்கு அந்நியமாகவிட்ட வேதனை ஒரு புறம்.. மறக்கவும் முடியாம இயல்பா வாழவும் முடியாம மனசளவில நான் படுகிற அவஸ்தை ரொம்ப கொடுமையா இருக்கு.

நான் பெரிய குற்றம் செஞ்ச மாதிரியும், என் திவாகருக்கு துரோகம் இழைச்ச மாதிரியும் மனசுக்குள்ள தினம் தினம் போராடுறேன். சமூகத்துல அதிலும் பழகினவங்க.. தெரிஞ்சவங்கள கண்டாலே அவமானத்தால கூனிக் குறுகிப் போறேன். எனக்குள் வெட்கமும், அச்சமும், அவமானமும் நடுக்கமும் தாக்க, ஏகாந்தமா போராடுறேன்.

நான் மானங்கெட்டவள் போன்ற உணர்வு எனக்குள்ளே என்னைப் பற்றி அருவருப்பு. நானே நொடிக்கு நொடி மனதால தீக்குளிச்சிக்கொண்டிருக்கிறேன். ஆனால் அடுத்தவங்க நான் பெருமை பிடிச்சவள். கல்யாணத்துக்கு அலையிறவள்.. பணக்காரன் பின்னால ஓடுறவள்னு பேசி சிரிக்கிறாங்க. ஐயோ என்னால தாங்க முடியலயே'

அடக்கி வைத்த வேதனை, மடை தாண்டி ஓடியது. மிதிவெடியை மிதித்தவாறு இருக்கும் மனிதனின் நிலையாகிவிட்டது காவேரியின் நிலை. காலைத் தூக்கினால் குண்டு வெடித்துவிடும். எடுக்காவிட்டால் அப்படியே இருக்க வேண்டும்.

பாவம் காவேரி. மிகவும் வசதியான குடும்பத்தின் ஒரே வாரிசு. பேரழகி. கெட்டிக்காரி. எனினும் மிகவும் அடக்கமானவள். செல்லப் பிள்ளை ஆனாலும் பொறுப்பும், பண்பாடும் நிறைந்தவள். எல்லாம் இருந்தும் வாழ்க்கை மட்டும் வடுவாகிவிட்டது. ஆனாலும் வாழ்க்கைக்கு முகம் கொடுக்கும் பொறுமைக்கு அவளுக்கு நிகர் அவளேதான். அவளது நற் பண்புகளுக்கு கிடைத்த பரிசோ என்னவோ சந்தர்ப்ப வசத்தால் மூன்று கணவருக்கு வாழ்க்கைப்பட நேர்ந்தாலும் மூவருமே மகான்கள். அந்தளவுக்கு காவேரியைத் தாங்கும் பேரன்புக்கு உரியவர்கள்.

திவாகரின் மறைவுக்குப்பின் மிகவும் விருப்பத்துடனேயே மொஹித் காவேரியை மணந்தார். காவேரியின் குழந்தைத் தனமான பாச உள்ளம் திவாகரின் நினைவை விட்டும் விலகிட முடியாத மனத் தடுமாற்றம் கண்டு காவேரியை நிம்மதியாக இயல்பாக இருக்கவிடவே மோஹித் விரும்பினார்.

மோஹித் பாவம் என்றே காவேரியும் ஒதுங்கிளாள். இருவரும் புரிந்துணர்வுடனேயே பிரிந்தனர். எந்தவித மனக் கசப்புகளும் இருக்கவில்லை.

காவேரியின் முழு வாழ்வியலையும் தெரிந்துதான் தயாள் மனமொப்பி அனுசரித்து பல வருடங்கள் அதீத பொறுமை காத்து, நிதானித்து, பரிவாக நடந்துகொண்டதாலேயே காவேரி இன்று தாய்மை பேறு பெற்றுள்ளாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைய தழும்புகளை மறக்க முடியாவிட்டாலும் சிறிது சிறிதாக இயல்பு வாழ்க்கைக்கு திரும்பினாள் காவேரி. திவாகர் மறைந்தபின் வெளியே தலைகாட்ட விரும்பாது, அஞ்சாதவாசம் செய்த அவள், நேற்றுத்தான் விழாவுக்கு தலைகாட்டினாள். அதுவும் இப்படியாகிவிட்டது. எதையுமே விகாரமாக பார்க்கிற வக்கிர ஜென்மங்கள், பாவம் ஒரு அப்பாவி மனசை கொடூரமா சிதச்சு சின்னாபின்னமாக்கிவிட்டு சந்தோசமா இருக்குதுகள்.

மறுமணம் செய்யிற பெண்கள் மானசீகமாக படும் வதையே ஏராளம். போதாதற்கு புரிந்துணர்வில்லாத மனுஷத் தன்மையே இல்லாத இவர்கள் ஏன் மிலேச்சத்தனமாக நடக்கின்றனர்? ரோஜாவின் மனம் கொதித்தது. நக்கீரனாய் நியாயத்துக்காய் வாதிட அவளது உள்ளம் துடித்தது. ஆயினும் அடக்கிக் கொண்டாள். இது உணர்ச்சி வசப்பட்டு புண்பட்ட மனதை ரணமாக்கும் தருணமல்லவே.

காவேரியை அணைத்தவாறே ஆறுதல்படுத்தினாள். வெட்டிகளின் பேச்செல்லாம் வெறும் பதர்தான். கதைகட்ட ஒருத்தி பிறந்தால் கண்ணகி வாழ்விலும் களங்கம் இருக்கும். உலகம் யாரைத்தான் விட்டுவைக்கும்?

'காவேரி நீ அழக்கூடாது. உன் தயாள் பேருக்கேற்ற தயாளம் நிறைந்தவர். இனி நீ உன் குழந்தையைப் பற்றி யோசி. சூரியனைப் பார்த்து நாய் குரைத்தால் நாயின் வாய்தான் நோகும். நீ தைரியசாலி. பொறுமைசாலி. உன்னை முழுசாப் புரிஞ்சவங்க எவ்ளோபேர் இருக்காங்க. நீ எதுக்கும் கவலைப்படாதே. உன் நல்ல மனதுக்கு உனக்கு நல்ல வாழ்க்கை கிடைச்சிருக்கு. நிம்மதியாய் இரு.

அடுத்தவங்க மனசை நோகடிக்கிற மனநோயாளர்கள் சொல்ற பேச்செல்லாம் கணக்கெடுக்காதே. எல்லாரையும் திருப்திப்படுத்த எவராலும் முடியாது. நாங்க வாழ்கிற வாழ்க்கை குற்றம் இல்லாததாக இருந்தால் எந்த விமர்சனமும் எங்களை ஒன்றும் செய்யாது. ஆ.. கார் சத்தம் கேட்குது. உன் கணவர் வந்துவிட்டார்போல. போய் சந்தோஷமா அவரோட இரு. நான் போய் வாறன். எதுக்காகவும் கலங்காதே. கோட் பிளஸ் யூ' என்றவாறு ரோஜா அங்கிருந்து நகன்றாள்!!!

"பூங்காவனம்" கிடைக்குமிடங்கள்

பூபாலசிங்கம் புத்தகசாலை கொழும்பு - 06
பெஸ்ட் குயின் பவுண்டேஷன் - கல்கிசை

**ப்ரியமான வாசகர்களே!**
**உங்களால் இயன்ற அன்பளிப்புக்களை வழங்குவதன் மூலம் 'பூங்காவனம்' சஞ்சிகையின் தொடர் வளர்ச்சிக்கு உதவுங்கள்!**





# நாளும் பொழுதும்



ந
குறைந்திடும் நிம்மதி – சுரந்தெம்
வாழ்வினில் தளிர்விட்டு
நிறைந்த ஒரு நல் வாழ்வில்
ல
நிம்மதியாய் நாம் வாழ
இறைவனருள் வேண்டி நிதம்
இதயத்தால் இறைஞ்சுகிறேன்
ம்
குறைகளின்றி எமக்கு ஒரு
குதூகலம் பிறந்திடவே!

தொடரும் துன்பம் தொல்லைகளும்
தொலைந்து போயொரு சுகம்
படரும் காலம் பார்த்திருந்து
பெ
புதுமை செய்ய ஏங்கி நிற்கும்
இடருள் சிக்கி சீரழிந்த
இளைய சமூக இதயங்கள்
று
சுடராய் வாழ்வில் ஒளிவீசி
சுகமாய் வாழவும் வேண்டுகிறேன்!

வோ
வாழ்வின் அவலம் யாவும் நீங்கி
வளமாய் நலமாய் திகழ்ந்திடவே
தாழ்வும் எம்மைத் தடுக்காத
ம்
தகுதி பெற்ற தலைமுறையால்
ஆளும் வல்லமை பெற்றே நாம்
அடிமைத் தளையைத் தகர்த்தே
நாளும் பொழுதும் நலம் பெறவே
நாயனருள் வேண்டி இறைஞ்சுகிறேன்!!!

பி.ரி. அஸீஸ் - கிண்ணியா 07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய அனுபவ அலசல் - 04

கவிஞர். ஏ. இக்பால்

பாடசாலையில் கல்வி கற்கும் போது 'கலாவல்லி' எனும் கையெழுத்துப் பத்திரிகையின் ஆசிரியராகவிருந்தேன். அக்காலம் நான் 'தினமணிக்கதிர்' தொடர்ந்து வாங்குவேன். உடன் மாணவன் அபுலசன் 'கல்கி' வாங்குவார். மாற்றி வாசித்துக்கொள்வோம். ஏனைய பத்திரிகைகளை எல்லாம் வாசிகசாலையில் தான் வாசிப்போம்.

அக்காலம் எனதூரான அக்கரைப்பற்றில், ஆசிரியர்களான செய்யத் அஹமத், செய்யித் மீரா, சகீதண்ணன், சின்னலெவ்வை, ஜமால்தீன், இன்னும் பலர் சேர்ந்து ஜின்னா வாசிகசாலை எனும் பெயரில் பொது வாசிகசாலை ஒன்றை அமைத்து பராமரித்து வந்தனர். எங்களது வாசிக வேட்கையை அது தீர்த்து வைத்தது.

நான் அதிகமாக தூங்குவேன். என் தாயார் என்னைக் கடிந்துகொள்வார். சொற்ப வேளை ஓய்வு கிடைத்தாலும் அதைத் தூக்கத்தில் தான் கழிப்பேன். அதனால் 'உனக்கு ஆயுசு குறைவு' எனத் தாயார் கடிந்துகொள்வார்.

1957 மே 6 ஆந்திகதி ஆசிரிய நியமனம் எனக்குக் கிடைத்தது. ஹாலி எலத் தமிழ் வித்தியாலயந்தான் எனது பாடசாலை. அடிக்கடி பதுளை செல்வேன். 1959 களில் தான் புத்தகம் வாங்க எத்தனித்தேன். பதுளை 'லோவர்ஸ் ரீட்டில்', 'கேஅன்கே' கடைக்கு அதிகமாகச் செல்வேன். அதற்கு முன் கடைதான் 'மீனாம்பிகைப் புத்தகசாலை'. அங்கே எனது முதலாவது புத்தகமாக 'தூக்கம் ஓர் கலை' எனும் நூலை வாங்கினேன்.

ஊர் சென்றதும் தூங்கும் போது எனது தாயார் வழமைபோல் கடிந்து கொண்டார். ஒரு பேச்சும் இல்லாமல் ஆர்.எஸ். மணி எழுதிய தூக்கம் ஓர் கலையை தாயிடம் கொடுத்தேன். அதை மெல்ல மெல்ல எழுத்துக் கூட்டி வாசித்த பிறகு எனது தாய் தூக்கத்திற்காக ஏசுவதில்லை.

இலக்கிய ஆர்வலர்கள் கேஅன்கே கடைக்குத்தான் வருவார்கள். முதன் முதல் தமிழோவியனை நான் அங்கு தான் சந்தித்தேன். பசறை பாரதி கல்லூரியின் தலைமை ஆசிரியர் கே. இராமசாமியுடன் தான் அவர் வருவார். அக்காலம் நிறைய எழுதிக்கொண்டிருப்பவர்தான் தமிழோவியன். அங்கே தெளிவத்தை ஜோசப், முஹம்மது சமீம் ஆகியோரும் வருவார்கள். தெளிவத்தை ஜோசப்பைவிட தமிழ் ஓவியன் தான் அக்காலம் பிரபல்யம்.





சில வேலைகளில் ஊவாக் கொலிஜ்ஜில் மேல் வகுப்பில் கற்கும் சோ. சந்திரசேகரனும் அங்கு வந்து நிற்பார். இப்போது பேராசிரியர் சந்திரசேகரனைப் பார்த்தால் என்னைவிட வயதில் மூத்தவர் என்றுதான் மற்றவர்கள் கணிப்பார்கள். நான் கற்பிக்கும் போது அவர் கற்கின்றார்.

நான் பதுளை செல்வதின் முக்கிய நோக்கம் பிங்கறாவையில் வசிக்கும் மல்லிகை மணாளனைப் பார்ப்பதற்காகவே. அவர் இலக்கிய ரசனையுள்ளவர் மட்டுமல்ல ரோஜாமலர்த் தோட்டம் ஒன்றையே கண்காணிப்பவர். மலர்கள் கன்னி கட்டியதிலிருந்து மலர்ந்து கருகும் காலம் வரை பார்த்து மகிழ்வார். என்னிடம் கதைத்து மகிழ்வார். அவர் முத்துச்சரம் எனும் சஞ்சிகையை நடாத்தியவர். 1960 களில் அவர் நடாத்திய சஞ்சிகையின் முதல் பிரதியில் அழகு ஆபத்து எனும் சிறுகதையொன்றினை எழுதினேன்.

1962 களில் பதுளை முஸ்லிம் மஹா வித்தியாலயம் - இப்போது அல் அதான் வித்தியாலயத்தில் கற்பிக்கத் தொடங்கினேன். அந்நேரம் அப்துல்லாஹ் என்பவர் தான் அதிபராக உயர்வு பெற்று வந்தார். அவர் வருமுன் அங்கே அப்துல் காதர் லெவ்வைதான் அதிபராயிருந்தார். மேல் வகுப்புக்கு பாடம் எடுப்பதை அப்துல் காதர் லெவ்வையின் மாணவர்கள் மறுத்ததால், அதிபர் என்னையே வற்புறுத்தினார். நான் மறுக்காது நன்கு ஆயத்தப்படுத்திக் கற்பித்தேன். அதன் விளைவு அநேக மாணவர்கள் சித்தியெய்தினர். இன்று எழுத்துலகில் புதுக் கவிதைகளை எழுதிக் குவிக்கும் பதுளை பாஹிராவும், அன்று சித்தியெய்திய மாணவர்களில் ஒருவர் தான். மேல் வகுப்பில் வெளியாக்கிய சிந்தனை கையெழுத்துப் பத்திரிகையின் ஆசிரியரும் பாஹிரா தான்.

பசறை பாரதி கல்லூரியின் பாரதி விழாவில் என்னைப் பேசுவதற்கு அழைத்தனர். அக்கினிக் குஞ்சொன்று கண்டேன் எனும் தலைப்பில் அக்காலமே புதுமையாகப் பேசினேன். இலக்கிய உலகம் விதந்து போற்றியமையும், தேசிய பத்திரிகைகளில் அது வெளிவந்தமையும் குறிப்பிடத்தக்கதே.

சம்பளத்தில் அக்காலம் ஒரு மாதம் 25 ரூபாவுக்கு புத்தகம் வாங்குவேன். 81 பக்கங்கள் கொண்ட தூக்கம் ஓர் கலை மனோ தத்துவ நூலின் விலை 1.25 சதம் தான். அப்படியானால் ஒரு மாதம் எத்தனை நூல்கள் வாங்கியிருப்பேன் என்பதை உணரலாம். இந்தத் தேட்டத்தின் பயன் எனது நூலகத்தில் 5800 நூல்கள் இப்போதுள்ளன. இதனால் ஆய்வாளர்கள் பல்கலைக்கழக மாணவர்கள் புத்தகங்களுக்காக என்னை அண்டுவர். இப்படி அண்டியவர்களில் நூல்கள், பத்திரிகை பைண்ட்கள் எடுத்து இதுவரை தராதவர்கள் பற்றிய பட்டியலைப் பார்ப்போம்.

**(இன்னும் வரும்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடக்கமாய் அழுதல்

என்னால் எத்தனை காலங்களுக்கு
அடக்கமாய் அழுமுடியும்
என்னால் எத்தனை நாட்களுக்கு
துயரங்களைச் சுமந்து செல்ல முடியும்

நெஞ்சில் அழுத்தம் வாழ்வில் சலிப்பு
தொடர்ந்த முரண் பிடிப்பு எல்லாமும்
ஒன்றாய்க் குவிந்த தாக்குதலுக்குள்
அகப்பட்ட பிச்சைக்காரன் போல்
நானும் வானமளவாய்த் தொலைந்து போனேன்

புற்கள் மேல்
முட்டியும் முட்டாமலுமாய்
முத்துப் பனித்துளிகளும்..!

மேக வீதியில்
தொட்டும் தொடாமலுமாய்
முழு நிலவும்..!

உருண்டு திரண்டு
ஓடி உலாவுதல் காண்

இவை கண்ட பிறகு
என் வெற்றிட மனதுக்குள்ளும்
ஒரு தூண்டல்

தூண்டலுக்கான ஒரு துலங்கலாய்
என் நெஞ்சுக்குள்ளும் ஒரு தெறிவினை

எதிலும் எங்கேயும் அளவளவாய்
வார்த்தைகளும் அருமருந்தானால்
நெஞ்சமும் நெல்லிக்கனியாய்
கசந்து இனிக்குமா..!

என்னால் எத்தனை காலங்களுக்கு
அடக்கமாய் அழுமுடியும்
என்னால் எத்தனை நாட்களுக்கு
துயரங்களைச் சுமந்து செல்ல முடியும்!!!

- சமரபாகு சீனா உதயகுமார்





# உருத்திராட்சப் பூனைகள்

## சிறுகதை

எஸ்.ஆர். பாலசந்திரன்

ஞாயிற்றுக்கிழமை. காலை பத்து மணி. வீடு அமைதியாக இருந்தது. சந்திரன் பத்திரிகையைப் படித்துக்கொண்டிருந்தான். சந்திரன் படித்துப் பட்டம் வாங்கி தனியார் ஸ்தாபனத்தில் நிர்வாக அதிகாரி. மனைவி மாலினியும் பட்டதாரி. ஆசிரியையாக கடமையாற்றுகிறாள். மகள் சந்திரவதனி படுசுட்டி. வயது பத்து. நல்ல அழகி. வதனி யாருடைய சாயல் என்பதில் சந்திரனுக்கும், மாலினிக்கும் போட்டியும் நிலவும். நிறம் தகப்பன். முகலட்சணம் தாய். படிப்பில் சமம்.

திடீரென வணக்கம் என்றொரு குரல் கேட்டது. எதிர்வீட்டில் ஒரு கிழமைக்கு முன்பு குடிபுகுந்த சதாசிவம் அங்கு நின்று கொண்டிருந்தார். வயது 65 மதிக்கலாம். சில காலம் அரபு நாடொன்றில் வேலை செய்து தற்போது ஓய்வு பெற்றவர்.

'நான் எதிர்வீட்டுக்காரன். மகன் வெளிநாட்டில் இருக்கின்றான். உங்களைப் பற்றி கேள்விப்பட்டு வந்தனான். நாங்கள் அயலவர். ஒருவரையொருவர் தெரிய வேண்டும் தானே..'

'வாங்கோ. வந்து இருங்கோ' என சந்திரன் வரவேற்றான். மனைவியையும் அழைத்து அறிமுகப்படுத்தினான். முகத்தில் விபூதிக் கற்றையோடு தூய வெள்ளை வேட்டி சால்வை அணிந்திருந்த சதாசிவத்தை சந்திரனுக்குப் பிடித்துவிட்டது.

சளசளவென்று பல விடயங்களைப் பேசிக்கொண்டிருந்தனர். இலங்கையில் நடக்கும் பாலியல் வன்முறை என்ற தலைப்புக்கு பேச்சு திரும்பியது.

ஆக்ரோஷமடைந்தவனாக சந்திரன் கூறினான்.

'வயது வித்தியாசம்கூட பார்க்கிறாங்கள் இல்லை. இரண்டு வயதுக் குழந்தை, இருபது வயதுக்குமரி, ஐம்பது வயதுக்கிழவி ஒருவரையும் விட்டு வைக்கிறாங்கள் இல்லை. வரவர நிலைமை மோசமாகிறது. பொம்பிளைப் பிள்ளைகள் மட்டுமா ஆம்பிளைப் பிள்ளைகள் கூட பாதுகாப்பில்லாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிறாங்கள். குற்றவாளிகள் சட்டத்தின் மூலம் தப்பிவிடுகிறார்கள்'

'தம்பி இப்ப நிலைமை மோசம்தான். நான் 5 வருடம் குவைத்தில் வேலை செய்தனான். அப்பா! பாலியல் குற்றத்திற்கு தலைவெட்டுத்தான். ஆணும் பெண்ணும் மனம் விரும்பி சோரம் போனால் கூட கல்லெறிந்து கொன்று விடுவார்கள். சாட்டையடி பயங்கரம்.

இப்படி ஒரு சட்டம் இலங்கைக்கு வர வேண்டும். குற்றவாளிகளை கோல்பேசில் நிறுத்தி வைத்து பகிரங்கமாக தண்டனை நிறைவேற்ற வேண்டும். நானும் இரண்டுமுறை குவைத்தில் தலைவெட்டைப் பார்த்தனான். குவைத்தில் பெண்களுக்கு படு சுதந்திரம். உண்மையில் ஆண்களுக்குத்தான் பயம், தங்கள் மேல் பழி வந்துவிடுமோ என்று. இலங்கையில் அப்படி சட்டம் கொண்டு வந்தால் சனத்தொகை பாதியாய் குறையும்' என்றுவிட்டு சிரித்தார்.

சந்திரவதனி தேனீர் கொண்டுவந்தாள். பிஸ்கட் தட்டையும், தேனிர் கோப்பையையும் அருகில் உள்ள மேசையில் வைத்தாள்.

'அடடே! உங்கள் மகளா? உங்களைப் போலவே இருக்கிறாள். வடிவான பெட்டை. இஞ்சை வாம்மா' என அருகில் இருத்திக்கொண்டார்.

டெலிபோன் மணியடித்தது. மன்னிக்கவும் என்று சொல்லிவிட்டு சந்திரன் உள்ளே போனான். ஞாயிற்றக்கிழமை என்பதால் 25 நிமிடங்களாக ஒரே அலம்பல்தான். பின்பு வந்தான். சந்திரவதனி உள்ளே போய்விட்டிருந்தாள்.

சிறிது நேரத்தின் பின் சதாசிவம் போய்விட்டார். 'எங்கள் வீட்டுக்கும் வாருங்கள்' என அழைப்பு வேறு விடுத்திருந்தார். சந்திரன் கதவை மூடிவிட்டு சமையலறைக்கு வந்தான். மனைவி மாலினி காளிபோல சீறினாள்.

'எங்கே அந்த விபூதியிட்ட கள்ளன்? நீங்கள் உள்ளுக்குப் போய்விட்டியள். அந்த அறுவான் மகளைத் தடவி விட்டிருக்கிறான். தொடக்கூடாத இடத்தில் தொட வெளிக்கிட்டிருக்கிறான். பாவி. கிழட்டு நாய். என்னுடைய வீடுதான் அவனுக்கு அகப்பட்டது போலும். விளையாட்டு காட்டிவிட்டான்.

நல்ல வேளை. என்ரை மகளுக்கு 'நல்ல தொடல், கூடாத தொடல்' பற்றி நேரத்தோடு சொல்லிக் கொடுத்திருந்தனான். அதனால் இவள் உடனே எழும்பி வந்திட்டாள். சொக்லட் தாராராம். நேரம் இருந்தால் அவரின் வீட்டுக்கு வரட்டாம். பாவி'

சந்திரனால் நம்ப முடியவில்லை. மனைவியின் கண்ணீர், மகளின் திகில் பரவிய முகம் விடயத்தை விளங்க வைத்தது. சந்திரன் தேங்காய் உடைக்கும்





கொடுவாக் கத்தியை பாய்ந்து எடுத்தான். சீறிக்கொண்டு வெளிக்கிட்டான். மாலினி ஓடி வந்து கையைப் பிடித்துக்கொண்டு தடுத்தாள்.

'ஐயோ! என்னப்பா. ஒன்டும் செய்து போடாதேங்கோ.'

'விடு மாலினி'

'வேண்டாம். பிறகு கொலைக்காரன் என்ற பெயரோடு சிறைக்குப் போய்விடுவியள். நான் கழுத்தில் கயிறு மாட்டி மகளோடு தொங்க வேண்டி வரும்'

'அவனை சும்மா விடக்கூடாது மாலினி...'

'விடுங்கோப்பா. அந்தக் கோதாரியில போவானுக்கு கடவுள் தண்டனை கொடுப்பார். ஆண்டவர் பார்த்துக்கொண்டிருக்கிறார். ஐயோ கத்தியைக் கீழே போடுங்கோ. ப்ளீஸ்'

சந்திரன் கோபம் அடங்கி மனைவியையும், மகளையும் அணைத்துக் கொண்டான். விபூதி பூசி போலி வேடம் போடும் உருத்திராட்சப் பூனை இவன். தூ.. என காறித் துப்பினான்.

அடுத்த முறை வரட்டும். அவனுக்கு பாடம் படிப்பிக்கிறேன். இவனைப்பற்றி மற்ற அயலவர்களுக்கும் சொல்ல வேண்டும்'

என கண்களைத் துடைத்தபடி மாலினி மகளை அணைத்துக்கொண்டாள்!!!

## வாசகர் கவனத்திற்கு

சந்தாதாரராக இணைந்து கொள்ளுங்கள். அது பூங்காவனம் சஞ்சிகை தொடர்ந்து வெளிவருவதையும், கிடைப்பதையும் உறுதி செய்யும். சந்தாதாரராக இணைந்து கொள்பவர்கள் ஆகக் குறைந்தது 500/= வை சந்தாவாக செலுத்தவும். பக்கச்சார்பற்ற முறையில் எழுதப்பட்ட, தெளிவான கையெழுத்தில் அமைந்த, இதுவரை பிரசுரமாகாத (சிறுகதைகள், இலக்கியக் கட்டுரைகள் A4 தாளில் 03 பக்கங்களுக்குள்) ஆக்கங்களையே பூங்காவனம் எதிர்பார்க்கிறது. பூங்காவனம் இதழில் விளம்பரங்களைப் பிரசுரிக்க மற்றும் கொடுப்பனவுகள், சந்தா, விற்பனை முகவர்களின் தொடர்புகள் ஆகியவற்றுக்கு 077 5009 222 என்ற தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்!

- ஆசிரியர் குழு -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோம்பேரியின் காலம்

காலத்தைத் தின்னும்
என் காலத்தை
ஞாலத்தின் ஞானிகள்
உதவாக்கரைகளின் காலமென்பர்...

குறட்டையொலிக்குள் குதூகலித்து
பகற்கனவிலே,
அகமாழ்தலில்
அசாத்தியங்களின்
தோல்விகள் இறுதிவரை...

பௌர்ணமி வானிலே
சிந்தனை பாய்விரித்து
வாகைப் புஷ்பங்கள் பறிப்பதில்
பிரயாசைப்படாமல்
நீரோடைக் கண்ணாடியுடைத்து
நிலவு பிடிக்க எத்தனிக்கும்
ஊதாரித்தனமான பொழுதுகள்...

சாற்றிடும் சஞ்சலங்களும்
சிக்கல்களும்
பொறுப்பற்ற மனப்பான்மையின்
உதிர்வுகளாக...

காற்றுக்கும் சலங்கைகட்டும் சாதனையுலகிலே
தூற்றும் ஆன்மாக்களிடையே
கடமை தவறிய கையறுநிலையில்...

சோம்பேரி பலமுறை பிறக்கிறான்
பிறவிகள் ஒவ்வொன்றிலுமே
தவறிவிட்டதையெல்லாம்
தத்தெடுக்க நினைக்கிறான்!!!

- பதுளை பாஹிரா





# பெண் உடலைக் கொச்சைப்படுத்தும் ஆணாதிக்கம்

சந்திரகாந்தா முருகானந்தன்

பெண்ணைத் தன்னைப் போன்ற சமத்துவமான ஒரு பிறவியாகக் கருதாமல் போகப்பொருளாக தமது சொத்துடமையாக ஆண்கள் கருதும் நிலை இன்றும் தொடர்கதையாகவே உள்ளது. பெண்ணிய முன்னெடுப்புகளால் இந்த நிலையை முற்றுமுழுதாக போக்கிட முடியாதிருக்கின்றது. பெண் என்றதும் அவளது உடலையே பலர் முதன்மைப்படுத்தி வைத்திருக்கிறார்கள். பெண் பற்றிய இதர அம்சங்கள் யாவும் அவளது உடலுக்குப் பின்னர்தான் என்ற மனப்போக்கு மாறாதவரை பெண்ணிய விடுதலையும் பால் பேதமற்ற சமத்துவமும் ஒருபோதும் கிட்டப்போவதில்லை.

ஒரு ஆணும் ஒரு பெண்ணும் திருமண பந்தத்தில் இணைந்து தாம்பத்திய உறவு கொள்வது இயற்கையின் நியதி. ஆண், பெண் இருவருக்கும் மனோரீதியிலும், உடல் ரீதியிலும் பாலியல் உந்துதல் இருப்பது இயல்பே. இது வெறும் உடற்தேவை மட்டுமல்ல. மனோ ரீதியிலும் இத்தேவை உள்ளது. பரஸ்பரம் இருவருக்கும் தேவையான இந்த அந்தரங்க உறவை கொச்சைப்படுத்தலாமா?

எங்கு பார்த்தாலும் பெண் என்றதும் அவளது உடல் அவயங்களை நோக்குகின்ற அவலமான நிலை உள்ளது. பெண் என்றால் அதுதான் - அது மட்டும்தான் என்று பல ஆண்கள் தமது அந்தரங்கத்திலாவது பித்துப் பிடித்து அலைகிறார்கள். இதனால் எங்கும் பெண்ணுடலைத் தரிசிக்கின்றபோது ஆணின் கண்ணும் மனதும் மானசீகமாக அதை நோக்குகிறது. அவள் கௌரவமான உடை அணிந்து வந்தால் கூட, அவளது உடல் அமைப்பையும், வெளித்தெரியும் பகுதிகளையும் மோகத்துடன் பார்க்கிறார்கள். பெண்ணின் நிர்வாண உடலையே பித்துப் பிடித்து அலையும் ஆண்களின் மனது நோக்குகிறது.

பெண்ணின் உடலைப் பற்றிய இந்த வக்கிர நிலை இருப்பதால்தான் பெண்ணுடலை விளம்பரப் பொருளாக்கி வியாபாரப் பொருளாக்கி மகிழ்கின்றனர். பெண்ணின் உடலை வெளிக்காட்டி சினிமாவில் அவளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாபாரப் பொருளாக்குகின்றனர். பெண்ணைப் படம் பிடித்து ரசிக்கின்றனர். இவை யாவும் பெண்ணை வெறும் உடலாகவும், பொருளாகவும் பார்க்கின்றமையால்தான் ஏற்படுகின்றன.

அண்மைக் காலமாக இலத்திரனியலின் அதிசயிக்கத்தக்க முன்னேற்றத்தினால் தொலைபேசி, கணினி முதலானவை உலகமயமாதலினால் சகலருக்கும் கிடைக்கின்றது. இவற்றில் நாளுக்கு நாள் அதிசயிக்கத்தக்க முன்னேற்றகரமான விடயங்கள் வந்த வண்ணமே இருக்கின்றன. இதனால் மனிதனுக்குப் பல விடயங்கள் இலகுவாக உள்ளன. நல்ல முன்னேற்றமான விடயங்களுக்குப் பயன்படும் இவற்றின் மூலம் தீமையான விடயங்களும் பரவி வருகின்றன.

இதிலொன்றுதான் பெண்களின் படங்களையும், உடலையும் கணினி மூலம் பகிர்ந்து கொள்ளலாகும். இதற்கு மேலாக மைக்ரோ கெமராக்கள் மூலம் பெண்களுக்குத் தெரியாமலேயே அவர்களைப் படம் பிடித்து அவர்களின் அந்தரங்கங்களையும் பகிர்ந்து கொள்ளும் கேடு கெட்ட செயல் பெருகி வருகின்றது. இவற்றை கணினியில் செலுத்தியும், சீடிக்களில் பதித்தும் வியாபாரம் செய்யும் அவலமான செயற்பாடுகளும் அதிகரித்த வண்ணம் இருக்கின்றன.

பெண் உடை அணிவது அவள் சுதந்திரமான விடயம் என பெண்ணியவாதிகள் வாதாடுகின்ற போதும், பெண் தனது உடலை முழுமையாக மறைக்கும் ஆடைகள்தான் அவளுக்கு பாதுகாப்பு என்ற எண்ணத்தை சில வக்கிர ஆண்களின் பார்வை உருவாக்கியுள்ளது!!!

---

# பணக்கார கடன்காரர்கள்

கோடீஸ்வரர் வீட்டுக்கு
குழந்தை பராமரிக்கப் போனேன்
வங்கி விடுமுறை..
நாட் கூலியை
நாளை தருவதாக
மாலை சொன்னார்!
ஒன்றுமில்லா ஏழைகளிடமும்
ஓர் நாளாவது
கடன்காரர் ஆகின்றார்கள்
பெரும் பணக்காரர்கள்!!!

**யோ. புரட்சி**





# குருவி(ன்)ப் பாடம்

## சிறுகதை

**சூசை எட்வேட்**

அது ஒரு கள்ளுத் தவறணை தான்! பனை ஓலைகளால் வேய்ந்து நீளப் போக்கான கொட்டிலாக அது அமைந்திருக்கிறது. பனங் குற்றிகளை இரு பக்கமும் வரிசைப் போக்காக அடுக்கியிருக்கிறார்கள். கையிலே புழாவை ஏந்தி தங்கள் இன்பவிழாவை நடத்துவதற்கு வசதியாக. என்றாலும் சிலர் மரநிழல்களை நாடி வட்டம் போட்டு கூட்டம் கூட்டமாக கூடியிருந்து அந்தரங்கமாக பேசி இதய தாகம் தீர்ப்பாரும், உல்லாசம் சல்லாபமாக மகிழ்ச்சி ஆரவாரம் செய்வாருமாக இவர்களில் பல ரகம். ஒரு வாகை மரம் அழகாக தோகை விரித்து நிழல் பரப்பி நின்றது. அதன் நிழலில் ஒரு சிறு கூட்டம் புழாவை ஏந்தியபடி சிட்டுக்குருவிகள் போல் சிங்காரக் கதைகள் பேசி சிரித்து மகிழ்ந்திருந்தனர். வாழ்க்கையின் எந்தக் கவலையும் அற்றிருந்தனர்.

மரக் கிளைகளில் பல வண்ணக் குருவிகள் முடிவில்லாமல் மகிழ்ச்சி ஆரவாரம் செய்துகொண்டிருந்தன.

கள்ளுக் குடிப்பவர்கள் எல்லாம் கண்டபடி உளறுபவர்கள் அல்ல. கருத்தாக பொழிப்பாக கதை பேசுவாரும் உண்டு. ஒருவன் சொன்னான்,

"மச்சான், நாங்கள் கள்ள அடிச்சாத்தான் சந்தோசமாக கதைக்கிறம். பாடுறம். ஆடுறம். ஆரவாரம் செய்யுறம். ஆனால் இந்தப் பறவைகள் வெறும் மரக்கொப்புகளில இருந்துகொண்டு எப்ப பார்த்தாலும் ஆனந்தமாக ஆரவாரமாக இருக்குதுகள். இது எப்படி அதுகளால முடியுது? எங்களால இயலவில்ல. அடுத்த பிறவி ஒண்டு இருந்தால் நான் பறவையாகத்தான் பிறக்க விரும்புறன்"

"எண்டாலும் மச்சான் அதுகளுக்கு எங்களப் போல பகுத்தறிவில்ல"

"பகுத்தறிவால தாண்டா நாங்கள் எல்லாம் பகுத்து பார்த்து பிரிஞ்சு நிண்டு, பிரிவினை கண்டு பிரச்சினைப்பட்டு சண்டை பிடிச்சு மகிழ்ச்சியை துலைச்சுப் போட்டு நிற்கிறம். கள்ள அடிச்சாத்தான் ஆனந்தம் வரும் என்ற நிலைப்பாட்டில வந்து நிற்கிறம்"

இப்படியாக உரையாடல் போய்க் கொண்டிருக்கையில் ஒருவன் தனியாக ஒரு கொப்பில் உள்ள கூட்டில் உள்ள குருவியைக் காட்டினான். தாய்ப்பறவை குஞ்சுகளுக்கு இரை கொடுத்து அமுதூட்டிக் கொண்டிருந்தது. குஞ்சுகள் ஆவலில் தங்கள் அலகை அகலத்திறந்து அவதிப்பட்டன. தாய்ப்பறவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிவோடு பசிதீர்த்துக் கொண்டிருந்தது. இந்த அருமையான காட்சிகள் எப்போதும் பார்க்கக் கிடைக்காது. அவர்கள் கள்ளையும் மறந்து இந்தக் கண் கொள்ளாக் காட்சியை கண்டு களித்தனர்.

ஒருவன் "இதென்னடா பெரிய அதிசயத்த பார்த்துக் கொண்டு நிக்குறீங்க. எங்கட வீடுகள்ள தாய்மார் பிள்ளைக்கு பாலூட்டுறத, சோறூட்டுறத, ஆராரோ பாடுறத நீங்கள் பார்க்க இல்லையோ?"

"எண்டாலும் மச்சான், தாய்மார் எவ்வளவு பாசம் பட்சமாக குழந்தைகள மடியில வைச்சு தேவையானத எல்லாம் கவனிச்சு கண்ண இம காக்கிற மாதிரி எண்டு சொல்லுவாங்களே, அது மாதிரி வளர்த்தெடுக்கிறாங்கள். ஆனால் நாங்கள் என்ன செய்யுறம்? புள்ளையக் குடுத்துப்போட்டு, காசையும் குடுத்துப்போட்டு எங்கட கடமை முடிஞ்சுது எண்டு போட்டு இங்க வந்து கிடக்கிறம் வீட்டு நினைப்பே இல்லாமல்"

"அதுதானப்பா இயற்கை. பார் தாய்ப் பறவைகள் உணவு கொடுக்குது பாசமா இருக்குது. இந்தத் தகப்பன் பறவையை கண்ணப் படைச்சும் காண இல்லையே"

இவர்கள் பறவைக் கதையைவிட்டு, கள்ளைச் சுவைத்துக் கொண்டு வேறு கதைக்குப் பறந்தனர். அப்போது மழை தூறலாயிற்று. ஆனாலும் இவர்கள் எவரும் அசையவில்ல. ஏனெனில் மரம் அவர்களுக்கு குடை விரித்து நின்றது. அப்போது ஒருவன் மேலே மரக்கிளையைக் காட்டினான். அங்கே கூட்டில் இருக்கும் குஞ்சுகளுக்கு தாய்ப்பறவை தன் சிறகுகளை அகல விரித்து கூரையாக மூடி மறைத்து ஒரு துளி நீரும் உட்புகாமல் பாதுகாப்புக் கொடுத்துக்கொண்டிருந்தது. இந்தக் காட்சியை எல்லோரும் கள்ளையும் மறந்து கண்டு களித்தனர். அந்தக் குருவியை ஒருவன் இனம் கண்டான்.

"இது கொண்டைக்கிளார் குருவியடா" என்றான். திருகோணமலையிலே இதை அப்படித்தான் அழைப்பார்கள். உச்சந்தலையிலே கொண்டை வைத்தது போலிருக்கும். கறுப்பும் வெள்ளையும் சாம்பல் நிறமும் கலந்திருக்கும். கடைவாய் சிவப்பாயிருக்கும். புளுணி குருவியின் அளவாயிருக்கும். அதன் கத்தல், அலறல் சத்தமாயிருக்கும். அனேகமாக பூக்களைத்தான் கொத்திக் கொண்டு போகும்"

நீண்ட காலமாக இந்த கொண்டைக் கிளாரைத்தெரிந்தும், இன்று தான் அதன் அதிசயமான காட்சியைப் பார்க்கின்றனர்.

தூறல் போட்டுக் கொண்டிருந்தது பெருந்தூறலாகியது. இவர்கள் அங்கிருந்து அகன்று கொட்டிலுக்குள் போய் அமர்ந்தனர். கள்ளையும் பருகினர். கொட்டிலுக்குள் இருந்து மேலே பார்த்தனர் கிளையை அந்த சிறகடிக்கும் பறவை அசைவில்லாமல் அப்படியேதான் கிடந்தது. தன் இறகையும் உடலையும் கூரையாக்கி போர்வையாக்கிக் கொண்டிருந்தது. இது வீட்டுத் தாய்மாரையும் விஞ்சுவதாகவேபட்டது அவர்களுக்கு. "டேய் மச்சான் இதுகள் பகுத்தறிவில்லாததுகள் எண்டு சொல்லுறது பெரிய பிழை"





மழை பெருமழையானது. தொடர்ந்து பெய்து கொண்டே இருந்தது. இவர்களும் வெளியே போக முடியாத நிலை. ஆனாலும் இதையிட்டு கவலைப்படும் நிலையில் யாரும் இல்லை. முடிய முடிய வேண்டி பருகலாயினர். இதுவே நல்லதாகப் போயிற்று. இவர்களில் அனேகர் தினக் கூலிகள்தான். வேலை முடிய சம்பளத்தை வாங்கிக் கொண்டு நேரே இங்கேதான் வருவார்கள். இங்கே குடித்து முடித்து மிஞ்சியதைத்தான் மனைவி கையில் கொடுப்பார்கள்.

இன்று அடை மழை. இப்போதைக்கு விடாது போலுள்ளது. வெறிமுறியாதிருக்க, முடிய முடிய வேண்டிக் குடித்துக் கொண்டே இருந்தனர். இன்று வீடு ஏகும் போது சட்டைப்பை காலியாகத்தான் இருக்கும் போலும். மழைக் குளிருக்கு இதமாக வெறியை கூட்டுவதற்கு பலமாக பீடியை இழுத்து இழுத்து புகையை விட்டுக்கொண்டிருந்தனர். அரட்டையரங்கம் தொடரலாயிற்று. ஏதேதோவெல்லாம் உளறிக் கொட்டினர். மழை இன்னும் விடவில்லை. இப்போதைக்கு விடாது போலுள்ளது. நேரமும் நீடித்துக் கொண்டே இருந்தது. திடீர் என்று அவர்களுக்கு அந்தக் கொண்டைக்கிளார் குருவியின் ஞாபகம் வந்தது.

மேலே எட்டிப் பார்த்தனர் மரக்கிளையை... என்ன அதிசயம். எல்லோரும் வாய்பிளந்து பார்த்துக்கொண்டே நின்றனர். தாய்க்குருவி சிறகால் போர்த்தி மூடியபடி படுத்து தொப்பலாக நனைந்தபடி கிடந்தது. ஆண் குருவியும் அங்கே காட்சியளித்து. அது தன் அலகுகளில் இரையை நிறைத்துக்கொண்டு வந்து தாய்க்கும் குஞ்சுகளுக்கும் ஊட்டிக் கொண்டிருந்தது. அது அலறிக் குரல் எழுப்புவதும், போவதும் வருவதும் அமுதூட்டுவதுமாக இருந்தது. அதன் பரபரப்பு.. சுறுசுறுப்பு.. பதகளிப்பு தாய், குஞ்சுகளின் அங்கலாய்ப்பு, எல்லாமே உயிர் வாழ்வின் உயிர்த் துடிப்பை படம்பிடித்தது! ஆண்குருவியும் தொப்பலாக நனைந்து நனைந்தே இந்தக் கைங்கரியத்தைச் செய்து கொண்டிருந்தது. இடைக்கிடை சிறகுகளை விரித்து உதறியது. முள்ளிவாய்க்காலின் மனித அவலங்களை இவை காலம் பூராவும் அனுபவிக்கின்றன போலும்.

"மச்சான், நாங்கள் எல்லாம் வெறும் பேயரடா.. மடையரடா.. அங்க வீட்டில என்ன பாடோ தெரியாது.. வீடும் ஒழுக்கு. ஏணைக்க பிள்ளையும் கிடக்கு. ஒரு பிள்ள காய்ச்சல்ல பாயில கிடக்கு. மனுசி எண்னெண்டுதான் சமாளிக்கப்போறாளோ தெரியல்ல. நான் குடையும் கொண்டு வரல்ல. என்ன செய்யுறதெண்டு தெரியல்ல"

'குடையிருந்தாப் போல இப்ப வேண்டி வச்சிருக்கிற கள்ள விட்டுற்று போக உனக்கு மனம் வருமோ"

"இந்தக் குடிக்குக் குடுக்கிற காச சேர்த்து வைச்சிருந்தா, எப்பவோ வீட்ட வேஞ்சிருக்கலாமே! இப்ப கவலப்பட வேண்டி வந்திருக்காதே!"

"என்ன சொல்லுறாய் நீயும் அப்படித்தானேடா"

(முற்றும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதநேயம் மரணித்துவிட்டது!

பத்துமாதம் சுமந்து பெற்று
பாலூட்டி தாலாட்டி வளர்த்தவளை

உண்ண உணவு ஊட்டித்தந்து
உதிரத்தால் உரமேற்றி மகிழ்ந்தவளை

பள்ளி செல்லும் பருவம்தன்னில்
பக்குவமாய் பணிவிடைகள் செய்தவளை

வேண்டுவன வேண்டும்போது தந்துதவி
வெற்றிப்படிக்காய் விருப்பமுடன் உழைத்தவளை

நல்லவை சொல்லி நயம்படவாழ்ந்து
நானிலம் போற்ற வழிவகுத்தவளை

உத்தியோகம் கிடைத்தபோது உளமகிழ்ந்து
ஊரெல்லாம் மகிழ்ச்சிபொங்க உரைத்தவளை

காதலால் கட்டுண்டுநின்ற நிலையறிந்து
கண்ணியம் காத்து திருமணம் செய்து வைத்தவளை

புதிதாய்வந்த மருமகளை பாசமுடனேற்று
பக்குவமாய் பலவுதவிகள் செய்தவளை

வயதும் நோயும் வாட்ட அவளை
அனாதை விடுதியிலே விட்டுவிட்ட பரிதாபம்

பாசம் கொண்டவளுக்கு நேசம்காட்டாத
துரோகத் தனத்தால் வெதும்பும் மனித உயிர்

அதை எண்ணிப் பார்க்க விரும்பாத
அர்த்தம் புரியாச் சடப்பொருட்கள்

அவனியில் உலாவருவதால் - இன்று
மனிதநேயம் மரணித்துவிட்டது!!!

- த. சிவசுப்பிரமணியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சந்தேகித்தால் சந்தோசமில்லை

கா. விசயரத்தினம் - லண்டன்

சந்தேகம் என்னும் ஐயம், தயக்கம், நிச்சயமின்மை, அவநம்பிக்கை, மனவுறுதியின்மை, உறுதியற்ற நிலை ஆகியவை மனித வாழ்க்கையின் வளர்ச்சியைத் தகர்த்துத் தீராத் தொல்லைகளைத் தந்த வண்ணம் உள்ளது. சந்தேகம் மக்களைச் செயலில் இறங்க முடியாதவாறு தயக்கம் காட்டித் துணிவும் ஊட்டி நிற்கின்றது. இவ்வாறான செயல் சமுதாயத் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

தரத்தில் விஞ்சிய மேலாராய்வுக்கு அடிப்படையான தற்காலிகப் பொது விளக்கக் கோட்பாட்டில் ஐயுறவு எழுந்ததனால் பல ஆய்வறிவு சார்ந்த முன்னேற்றங்கள் உருவாகியன என்று விஞ்ஞான ரீதியில் கருதப்படுகிறது. எதிரி முறையில் அமைந்த அதிகமான சட்டத்தை மீறும் வழக்குகளில் வழக்குத்தொடுனர் நிலை நிறுத்த வேண்டிய செய்திகளை ஐயப்பாடேதுமின்றி வாதமூலம் நிலைநாட்ட வேண்டுமென்பது சட்டக் கோட்பாடாகும்.

**மேற்கோள் வாசகம்**

இனி, ஐயம் பற்றி மேல்நாட்டு அறிஞர்கள் கூறிய மேற்கோள் வாசகங்கள் ஒரு சிலவற்றைப் பார்ப்போம்.

*'தன்னடக்கமுடைய ஐயம் விவேகத்தின் கலங்கரை விளக்காகும்'*
*(வில்லியம் சேக்ஸ்பியர் - William Shakespear)*

*'ஐயுறவுப் பழக்கத்திலும் பார்க்க மிக மோசமானது வேறொன்றுமில்லை. ஐயம் மக்களைப் பிரித்து வைக்கிறது. ஐயம் நட்புறவைக் கூட்டழித்தும், உறவைப் பிரித்தும் வைக்கும் நஞ்சாகும். இது சினமூட்டித் துன்புறுத்தும் குத்தும் முள்ளாகவும், கொலை புரியும் குத்து வாள் போன்றதுமாகும்'*
*(புத்தர் - Buddha)*

*'ஒருவரின் வாயைத் திறந்து அவர் சந்தேகங்களை வெளிக் கொணர்வதிலும் பார்க்க ஓர் அறிவிலி என்ற நினைப்பில் அமைதியாயிருப்பது சிறந்தது'*
*(ஆபிரகாம் லிங்கன்- Abraham Lincoln)*

*'ஐயம் எழுங்கால் செயலில் ஈடுபடாதிரு'*
*(பென்சமின் பிறாங்லின்- (Benjamin Franklin)*

*'ஐயுறவை ஏற்றுக்கொள்வதுதான் என் திடநம்பிக்கை'*
*(பராக் ஒபாமா – Barack Obama)*

*'சந்தேகம் இல்லையெனில், இயந்திர அமைப்பு, செல்வ வளமுள்ள அதிகமான சோம்பேறிகளை உருவாக்கிவிடும்' (கார்ல் மார்க் - Karl Marx)*

*'ஐயம் புலன்களுக்கு இணக்கமான நிலைமையன்று. ஆனால் அது உறுதியாக நகைப்புக்குரியது' (வொல்ரயர் - Voltaire)*

*'ஐயுறவு எழுங்கால் உண்மை பேசு' (மார்க் ருவெய்ன் - Mark Twain)*

**பழமொழி**

பழமொழிகள் ஒவ்வொரு நாட்டிலும் மூதுரைகளாய் அமைந்து பல செய்திகளைக் கூறி அந்தந்த நாடுகளின் செல்வத்தினை எடுத்தியம்பி நிற்கின்றன. பல்வேறு நாடுகள் ஐயம் பற்றிக் கூறும் பழமொழிகள் ஒரு சிலவற்றையும் காண்போம்.

*'ஒருவனை ஐயப்படுவதற்குமுன் அதனை ஏழு முறை தீர விசாரிக்க வேண்டும்' - (யப்பான்)*

*'ஆழ்ந்த ஐயம், ஆழ்ந்த மெய்யறிவு. சிறிய ஐயம், சிற்றளவான மெய்யறிவு' - (சீனா)*

*'ஒன்றும் தெரியாதவனுக்கு ஐயப்படவும் தெரியாது' - (ஆங்கிலம்)*

*'ஐயம் செயலாற்றுத் தொடக்கம், மெய்யறிவின் முடிவன்று' - (ஆங்கிலம்)*

*'ஐயுறவென்பது ஒருவனின் செயலில் அரைப் பங்கை முன்னதாகவே இழந்ததற்கு ஒப்பாகும்' - (செக்கொஸ்லேவாக்கியா)*

*'ஐயம் தீர்ந்தும் நெஞ்சாரவில்லை' - (தமிழ்)*

*'ஐயமான காரியத்தைச் செய்யலாகாது' - (தமிழ்)*

**இலக்கியப் பார்வை**

காலத்தால் மூத்த இலக்கியங்கள் சந்தேகத்தால் ஏற்பட்ட நன்மை தீமைகளை எவ்வண்ணம் விபரித்துக் கூறுகின்றன என்பதையும் ஈண்டுக் காண்போம்.

**மகாபாரதம்**

'பாண்டவர்களின் செல்வம் நாள்தோறும் வளர்கிறது. நமது செல்வமோ குறைந்து கொண்டு போகின்றது. அவர் புகழ், வீரம் யாவும் பெருகுகின்றன. அவர்களைப் போரில் வெல்ல முடியாது' என்று சந்தேகங் கொண்டான்





துரியோதனன். தன் மாமன் சகுனியின் உதவியுடன் பாண்டவர்களைச் சூதாட்டத்தில் வென்று, அவர்களைப் பதின்மூன்று ஆண்டுகள் வனவாசம் அனுப்பி, அதன்பின் பாண்டவர்கள் வந்து நிபந்தனையின்படி இழந்த நாட்டைத் தரும்படி கேட்க, துரியோதனன் மறுத்தரைக்கப் போர் மூண்டு துரியோதனன் ஆகிய அனைவரும் போரில் மடிய, பாண்டவர் தருமர் தலைமையில் அரசாட்சி புரிந்து வந்தனர். துரியோதனன் கொண்ட சந்தேகம், சந்தோசமின்மையிலும் பார்க்க அவனை இந்நிலைக்குக் கொண்டு வந்துவிட்டது.

**கம்பராமாயணம்**

(1) இலங்கையில் இராவணனைப் போரில் மாய்த்து வென்ற இராமன் வீடணனை அழைத்து 'நீ சென்று சீதையைக் கொண்டு தருக' என்றான். சீதை வந்ததும், இராமன் அவளைக் கண்டு கடிந்து பேசினான். 'நீதியற்ற இராவணனின் இலங்கை நகரில் நெடுங்காலம் அவனுக்கு அடங்கி இருந்து அறுசுவை உணவை உண்டாய். உன் ஒழுக்கம் கெட்டும் நீ சாகவில்லை. நான் உன்னை விரும்புவேன் என்று நினைத்தாய் போலும். உன்னை மீட்பதற்காக நான் இராவணனை போரில் அழிக்கவில்லை. தன் மனைவியைக் கவர்ந்தவனைக் கொல்லவில்லையே என்ற பழி என்னைச் சூளாதிருக்கவே அவனைக் கொன்றொழித்தேன். இனியும் நீ எனக்குப் பணிவிடை செய்யும் தகுதியுண்டோ? எனவே நீ செத்தொழி, அல்லது உனக்கேற்ற இடத்துக்குப் போய்விடு' என்று சந்தேகம் கொண்ட இராமன் சொன்னான்.

சீதை கலங்கினாள், அழுதாள், சிந்தினாள், வருந்தினாள், உயிர் துறக்கத் துணிந்து இலக்குவனை அழைத்து, 'நீ தீயை உண்டாக்குவாய்' எனக் கூறினாள். எரியும் தீயில் சீதை பாய்ந்தாள். சீதையின் கற்புத் தீயினால் அந்நெருப்பு, பாலில் நனைந்த பஞ்சு போல் அணைந்தது. இதன்பின் இராமன் சீதையை ஏற்றுக்கொண்டான். ஆனால் இராமனிடம் எழுந்த சந்தேகம் தீர்ந்துவிட்டதா? என்பது சந்தேகமே. இனி அதையும் பார்ப்போம்.

(2) இராமன் காடு சென்று வந்து அரசு மேற்கொண்டு ஆட்சி புரிகின்றான். அன்றொருநாள் இராமன் ஒற்றர்களை அழைத்து 'இந்நகரிலும் நாட்டிலும் உள்ள மக்கள் பேசும் நன்மை தீமைகளை நீங்கள் சிறிதும் கூச்சப்படாமல் என்னிடம் கூறுவீர்' என்றான். ஒற்றர்கள் இராமனை வணங்கி, 'மன்னவனான இராமன் மனைவி சீதையை இலங்கை அரசன் இராவணன் ஓர் ஆண்டாக இலங்கையில் சிறை வைத்திருந்தான். அவளை மானமில்லாது தாரமாய் ஏற்றுக் கொண்டு அவளுடன் குடும்பம் நடத்துவது பெரும் குற்றமும் தாழ்வும் ஆகும் என்று பேசுகிறார்கள்' எனத் தெரிவித்துச் சென்றனர். இதைக் கேட்ட இராமனுக்கு மீண்டும் சந்தேகம் தலை விரித்து ஆடத்தொடங்கி விட்டது. இராமன் இலக்குவனை அழைத்து 'சீதையைக் காட்டிற் கொண்டு சென்று வால்மீகியின் ஆச்சிரமத்தில் விட்டு வருவாய்' என்றான். கற்பவதியான சீதை காட்டில் பட்ட பெருந் துயரங்களை யார் அறிவார்? சீதை தீயிற் பாய்ந்து தன் கற்பை நிலைநாட்டியபின்பும், கடவுள் அவதாரங்கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமனுக்கு இவ்வாறான சந்தேகங்கள் எழுந்தனவே என்று சிந்திக்க வைக்கின்றது.

**சிலப்பதிகாரம்**

ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தில் கலையரசன் கோவலன், கற்புக்கரசி கண்ணகியை மணந்து, பின் அவளைப் பிரிந்து விலைமகள் குடும்பத்தில் பிறந்த கலையரசி மாதவியுடன் காதல் வாழ்வு வாழ்ந்து, பின் ஊடல் காரணமாகக் கோவலன், மாதவி இருவரும் காதற் பொருளில் கானல் வரி பாடிய பொழுது, அதை மாதவி அயலான் ஒருவன்மேற் கொண்ட கள்ளக் காதல் என்று கோவலன் ஐயப்பட்டான். மாயமும், பொய்யும் உடைய குலத்தில் பிறந்த மாதவிக்கு இது இயல்புதான் என்று துணிந்த கோவலன் அவளையும் பிரிந்து கண்ணகியிடம் சென்றுவிட்டான்.

கானல் வரியால் ஏற்பட்ட சந்தேகம் தந்த விளைவுகள் இவை:- பாண்டிய மன்னன் ஆணைப்படி கோவலன் கொலை செய்யப்பட்டமை, கண்ணகி பாண்டியன் சபை நாடி நீதி கேட்டு நீதி தவறிவிட்டேனென்று பாண்டியன் உயிர் துறந்ததும், அவனுடன் பாண்டிமாதேவியும் உயிர் நீத்ததும், கண்ணகி மதுரை நகரை எரித்துத் தானும் தெய்வமானதும், கோவலன் பிரிவால் மாதவி துறவு பூண்டதும், கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த மணிமேகலையும் துறவு பூண்டு அறவாழ்வை மேற்கொண்டதும், கண்ணகியின் தாயும் மாமியும் உயிர் விட்டதும், மாமனும் தந்தையும் துறவு பூண்டதும் ஆகியனவாம்.

**திருக்குறள்**

அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள் ஐயம் பற்றிக் கூறும் செய்திகளையும் பார்ப்போம். 'ஐயத்திலிருந்து மெய்யுணர்வு பெற்றவர்க்கு அடைந்துள்ள இவ்வுலகைவிட, அடைய வேண்டிய மேலுலகம் அவர்க்கு அண்மையில் உள்ளதாகும்' - (353). 'ஐயப்படாமல் மனத்தில் உள்ளதை உணரவல்லவனை தெய்வத்தோடு ஒப்பாகக் கொள்ள வேண்டும்'- (702). திருவள்ளுவர் அந்தப் பெண்ணைப் பார்த்து 'தெய்வப் பெண்ணோ? மயிலோ? கனமான குழை அணிந்த மனிதப் பெண்ணோ? என் நெஞ்சம் ஐயப்படுகிறதே' - (1081) என மயங்கினார்.

'பெண் மானைப் போன்ற இளமைப் பார்வையும் நாணமும் உடைய இவளுக்கு, ஒரு தொடர்பும் இல்லாத அணிகளைச் செய்து அணிவது ஏனோ?' - (1089) என்றொரு ஐயம். 'யாரையும்விட நாம் மிக்க காதல் கொண்டிருக்கிறோம்' என்று சொல்ல, 'யாரைவிட? யாரைவிட?' என்று கேட்டு ஐயம் கொண்டாள். (1314). 'நினைத்தேன்' என்று கூறினேன். 'நினைப்புக்கு முன் மறப்பு உண்டு அன்றோ? ஏன் மறந்தீர்? என்று என்னைத் தழுவாமல் ஊடி ஐயம் கொண்டாள்' - (1316) அவளுடைய அழகை நினைத்து அமைதியாக அவளை நோக்கிப்





பார்த்தாலும், 'நீர் யாரை நினைத்து ஒப்புமையாக எல்லாம் பார்க்கிறீர்' என்று சந்தேகித்துச் சினம் கொண்டாள். - (1320)

**நற்றிணை**

தலைவன் பரத்தையுறவு கொண்டிருந்தான். இதைத் தலைவி தோழி மூலம் அறிந்து கொண்டாள். சின்னாளில் தலைவியின் மனைக்குத் தலைவன் வருகின்றான். தலைமகள் உள்ளத்தில் அவன்மீது ஊடல் இருந்தாலும், அவள் அவன்மேல் சந்தேகித்து ஊடியும், சினந்தும் அவனைப் பழித்துக் கூறுகின்றாள். "என் பழைய அழகு முற்றும் தொலைவதாயினும், உன்னை என் பக்கத்தில்கூட நெருங்க விடமாட்டேன். அப்படி நெருங்க விடுவேனாயின் நீ இறுகக் கட்டித் தழுவும் கையணைப்பை விலக்கி ஒதுக்க முடியாதவள் ஆவேன். பரத்தையின் சந்தனம் உன் மார்பில் உள்ளது. அவளோடு தழுவியதால் உன் மாலை வாடிக்கிடக்கின்றது. ஆகவே என் மனை வராதே. உன்னைத் தழுவி நிற்பவளான பரத்தையுடன் வாழ்வாயாக!." - (350) இதனால் தலைவன், தலைவி, பிள்ளைகள், உற்றார், உறவினர் சந்தோசம் குலைந்து அக்குடும்ப வாழ்க்கை பரிதாப நிலையடைந்துள்ளமையை மனத்தில் வாங்க முடியாதுள்ளது.

**பரிபாடல்**

தலைவியைப் பிரியேனென்று கூறிப் பிரியத் தொடங்கும்போது தலைவன்பால் ஐயம் கொண்டு ஊடிச் சீறினாள் தலைவி. " நீ பரத்தையருடன் கூடி, உறவாடி இன்பம் அனுபவிக்கின்றாய். அவர் நறு மணம் உன்னிலும் நாறுகின்றது. காலையில் சென்று மாலையில்தான் மனைக்கு வருகின்றாய். பகல் நேரத்தே சேரியில் பரத்தையருடன் பரவசமடைகின்றாய். இனியாவது பரங்குன்றைக் குறித்துப் பொய் ஆணையிடும் உன் செயலை நிறுத்திக் கொள்வாயாக" என்று கடிந்துரைத்தாள் தலைவி - (08)

**கலித்தொகை**

பரத்தையர் சேரியிலே தங்கி விட்டு வீடு வந்த தலைவனைச் சந்தேகித்த தலைவி "இங்கே நான் வாடி வருந்திக் கிடக்கின்றேன். நீ பரத்தையரோடு கூடிக் கலந்து மகிழ்ந்த களிப்புடன் என் முன் வந்துள்ளாய். அவர்களுடன் நீர்விளையாடி மகிழ்ந்திருக்கின்றாய் எனப் பிறர் வந்து கூறினர். உன் மாலையை எவளுக்கோ அணியக் கொடுத்துவிட்டு, அவள் தலையில் அணியும் கோதையைச் சூடியுள்ளாய். நான் இங்கு தனித்து வருந்திக் கிடக்க, நீயோ அழகிய பரத்தையரோடு துணங்கைக் கூத்தாடினாய் என்ற செய்தியையும் கேட்டேன். நீயோ அந்தக் களிப்பு மங்காது என்முன் வந்துள்ளாய். ஏதோ இப்படியாவது வந்து அருள் செய்தாய். அதுவே போதும். உன் பரத்தையர் வருந்துவார்கள். அவர்களிடம் மீண்டும் போய் அவர் நலம் காப்பாயாக"என்று கூறி அவனை ஒதுக்கி வைத்தாள். (மரு.1)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விஞ்ஞானம்**

விஞ்ஞான ஆய்வுக்கும் சந்தேகத்துக்கும் மிக நெருங்கிய உறவுண்டு. எந்த விஞ்ஞானிக்கும் சந்தேகம் எழாதிருக்க முடியாது. ஆய்வின் பொழுது சந்தேகம் எழாதிருந்தால் அந்த ஆய்வு முழுநிலை பெற்றதாகக் கணிக்கப்பட மாட்டாது. ஏனெனில் ஆய்வின் போது எழும் சந்தேகங்களை நிவர்த்தி செய்தால் அந்த ஆய்வு உயர்நிலை பெற்றுள்ளதாக மற்றைய ஆய்வாளர்களால் போற்றப்படுவர். இங்கு ஆய்வின் கண் எழும் சந்தேகங்கள் ஆய்வாளர்களுக்கு ஒரு தீங்கும் தராது. பாரிய நன்மைகளையே தந்து உதவுவன. இவை பற்றி இரு உதாரணங்களைப் பார்ப்போம்.

(1) **பூமி தட்டையா? உருண்டையா?** மனிதன் தோன்றிய காலத்தில் பூமியைத் தட்டை என்றுதான் கருதினான். இதே கருத்தில் பல கோடி ஆண்டுகளாகப் பூமியில் வாழ்ந்து வந்தான் மனிதன். கி.மு. 600 ஆம் ஆண்டில் பைதகொறஸ் (Pythagoras) என்ற விஞ்ஞானிக்குப் பூமி தட்டையா? உருண்டையா? என்ற ஒரு சந்தேகம் எழுந்தது. இச் சந்தேகத்தால் அவர் உந்தப்பட்டு ஆய்வுகள் பல செய்து பூமியானது **உருண்டை** என்று கூறினார். இதை கி.மு. 330 ஆம் ஆண்டில் அரிஸ்ரோட்டல் (Aristotle) என்ற விஞ்ஞானியும் பூமி உருண்டைதான் என்று ஒத்துக்கொண்டார். பல கோடி ஆண்டுகளாக மறைந்து கிடந்த ஓர் அரிய பேருண்மையைச் சந்தேகம் வெளிக் கொணர்ந்து மக்களை மகிழ வைத்துள்ளது.

(2) **மிதிவண்டி (Bicycle)** வண்டிகள் பல வகைப்பட்டவை. இவற்றில் மூன்று, நான்கு, ஆறு, எட்டு, பத்து, பன்னிரண்டு, பதினான்கு சக்கரங்கள் அமைந்த வண்டிகள் தற்போது பாவனையில் உள்ளன. இவை ஓடாது தரித்து நிற்கும்போது விழுந்துவிடாது நிற்கக் கூடியவை. இனி, இரு சக்கரவண்டி பற்றிப் பார்ப்போம். இவ் வண்டியை மிதி கட்டையுடன் 1860 ஆம் ஆண்டில் பிராஞ்சு நாட்டுப் புத்தாக்கப் புனைவாளர்களான பியர்ரி லால்லிமென் (Pierre Lallement) என்பவரும், ஏனெஸ்ற் மிச்சாயுச் (Ernest Michaux) என்பவரும் கண்டு பிடித்தனர். இது 19 ஆம் நூற்றாண்டில் மக்கள் பாவனைக்கு வந்தது. அப்பொழுது இவ்வண்டி தரித்து நிற்க முடியாது விழுந்துவிடும் என்று மக்களிடமிருந்து கடும் எதிர்ப்பு எழுந்தது. இச் சந்தேகம் கண்டு பிடிப்பாளர்களுக்கும் எழாமலில்லை. இவ்வண்டிக்கு விசையைக் கொடுத்தால் அது விழாமல் ஓடிக்கொண்டிருக்கும் என்று மக்களுக்குக் கூற அவர்களும் ஏற்றுக் கொண்டனர். இவ்வண்ணம் இவ்வண்டி பாமரமக்களின் நண்பனாகியது.

இதுகாறும், மேற்கோள் வாசகம், பழமொழி, மகாபாரதம், கம்பராமாயணம், சிலப்பதிகாரம், திருக்குறள், நற்றிணை, பரிபாடல், கலித்தொகை, விஞ்ஞானம் ஆகியவை ஐயம் பற்றியும் சந்தேகம் பற்றியும் கூறிய செய்திகளையும் அதனால் எற்படும் நன்மை தீமைகளையும் விரிவுபடுத்திப் பார்த்தோம். இவற்றால் எம் வாழ்வியல் சிறக்கும், நாமும் சிறப்போம், முன்னேறுவோம் என்ற மனத் துணிவும் பெற்று இன்பமுடன் வாழ்வோம்!!!





# சுதந்திரம் கம்பிகளுக்குப் பின்னால்..

காவல் இல்லாத தோட்டங்களை
சுதந்திரமாக மேய்கின்றன
கட்டாகய்காலிகள்

கொண்டாட்டமும்,
களிப்புமாய் அவைகள்
காணிக்காரனின் சுதந்திரமோ
கம்பிகளுக்குப் பின்னால்

கிழக்குச் சமவெளிகள்
திகட்டிவிட்டதால்
வடக்கில் வாய் நீள்கிறது

கடைவாயூறும்
கட்டாக்காலிகளைக்
கட்டி வைக்கவோ
கல்லால் அடிக்கவோ விடாமல்
காவல் காக்கிறது
இறையாண்மை

ஊரான் தோட்டத்தில்
மேயும் கட்டாக்காலிகள்
காணிப் பகிர்வையும்
காவல்காரனையும்
விரும்புவதில்லை

தெற்கிலும்
தென்கிழக்கிலும்
கட்டாக்காலிகள்
கால் வைப்பதில்லை

வாலை நீட்டினால் கூட
வேட்டையாடி விடுகின்றன
சிங்கங்கள்!!!

**மன்னார் அமுதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிஷ்டம்

**சிறுகதை**

ஏ.சீ. ஜரீனா முஸ்தபா

நிலாவும், அருணும் டாக்டர் முன்னால் அமர்ந்திருந்தனர். அவர் சொன்னதை இருவராலும் நம்ப முடியவில்லை. அந்த அதிர்ச்சியில் இருந்து நிலாவால் இன்னும் மீள முடியவில்லை. நிலாவை அழைத்துக்கொண்டு, நான்கு வயது மகனோடு வீடு வந்து சேர்ந்தான் அருண். வீடு வந்ததும் மகன் கார்த்திக்கை தூக்கி தன் மடியில் அமர்த்திக்கொண்டான்.

இப்படி ஒரு நிலையை அவனிடம் அவர்கள் எதிர்பார்க்கவில்லை. அவனைப் பார்க்கப் பார்க்க உள்ளத்தில் வேதனை பெருகியது. அவனை ஈன்றவளை நினைக்கும் போது கோபம் கோபமாக வந்தது. இதுபோன்ற ஈவிரக்கமற்ற பெண்களை என்ன செய்யலாம்? நிலாவை மெதுவாகப் பார்த்தான் அருண். அவளது விழிகளிலும் கண்ணீர்.

எப்படித் தேற்றுவது அவளை? என்ன சொல்லித் தேற்றுவது, ஒன்றுமே புரியவில்லை. அவன் எதையெல்லாம் மறக்க வேண்டுமென முயற்சித்தானோ அதையெல்லாம் மீட்டிப் பார்க்கத் துவங்கினான்.

அருணும், நிலாவும் ஒருவரை ஒருவர் காதலித்து திருமணம் செய்து கொண்டவர்கள். அவர்களது வாழ்க்கைக்குத் தேவையான எல்லா வசதி வாய்ப்புகளும் இருந்தது. ஆயினும் என்ன பயன் ஒரேயொரு குறையினால் தம் வாழ்க்கையில் நிம்மதியை, சந்தோசத்தைத் தொலைத்துவிட்டு தேடிக் கொண்டிருந்தார்கள்.

அப்படியெல்லாம் தேடிக் கிடைக்கக் கூடிய ஒன்றா அது? அப்படி முடியுமாக இருந்தால் இன்று வாழ்க்கையில் இக்குறைப்பாடு உள்ளவர்கள் யாவருமே ஜெயித்திருப்பார்கள்.

குழந்தை இல்லை. இதுதான் அவர்களது குறை. ஒன்றா... இரண்டா...? ஏழு வருடங்கள் எதிர்பார்த்து காத்திருந்தார்கள். எத்தனை டாக்டர்கள்? எத்தனை வைத்தியங்கள்? எல்லா முயற்சிகளிலுமே அடுக்கடுக்கான தோல்விகள் தான். வேண்டாத தெய்வமில்லை. கடைசியாக ஒரு நாள் அந்த தெய்வத்தின் கண் திறந்தது.

ஆம்...! ஒரு நாள் இரவு அருண் வேலை முடித்து வீட்டுக்கு திரும்பிக் கொண்டிருந்தான். அவர்களது லேனுக்குள் திரும்பும்போது அங்குள்ள மக்கள் கூட்டங் கூட்டமாக நிற்பதைக் கண்டான். காரை நிறுத்தி விசாரித்த போதுதான் அந்த விடயத்தை அறிய முடிந்தது. இரவு ஒன்பது மணிக்குப் போல் ஆற்றங்கரையோரப் பக்கம் பாலத்திற்கு அடியில் ஒரு பச்சிளங்





குழந்தையொன்றின் அழுகுரல் சத்தம் கேட்டதாம். அங்குள்ளவர்கள் ஓடிப்போய்ப் பார்த்தபோது ஒரு துணியால் சுற்றப்பட்ட நிலையில் குழந்தை வீரிட்டு அழுதுகொண்டிருந்ததாம். உடனே தூக்கிப் பார்த்தால் பிறந்து இரண்டு நாள் கூட ஆகியிருக்காத நிலையில் அந்த பச்சிளம் சிசுவைக் கண்டெடுத்துள்ளார்கள். எல்லோருக்கும் பேரதிர்ச்சி. அந்தக் குழந்தையை என்ன செய்யலாம் என்று ஒவ்வொரு திட்டங்களையும் முன்வைத்துக் கொண்டிருந்தது அந்தக் கூட்டம். அருணைக் கண்டதும் அவனது காரிலேயே அந்தக் குழந்தையைக் காவல் நிலையத்துக்கு கொண்டு சென்றனர்.

போகும் வழியில் அருணின் உள்ளத்தில் பல்லாயிரம் விண்மீன்கள் ஒளிர்வதை உணர்ந்தான். காவல் துறை அதிகாரி அருணின் நண்பனாக இருந்தது இன்னும் வசதியாகிப் போய்விட்டது. உலகில் விலை மதிக்க முடியாத ஒன்று இருக்கும் என்றால் அது தாய்மைப் பாக்கியம் என்பதை முழு சமுதாயமும் ஒப்புக்கொண்ட பின்னரும், அதைப் பொய்யாக்குவது போல் நடந்துகொள்ளும் ஒரு சில பெண்கள் இச்சமுதாயத்திற்கு இழுக்காகத் தெரிகிறது. ஆயினும் அதுவே அருணுக்கு நன்மையை ஏற்படுத்தியது.

மலடி என்னும் நாமத்தை அழித்தொழிப்பதற்காக அவர்கள் மேற்கொண்ட அனைத்து முயற்சிகளுக்குமே கிடைத்த வெற்றியாக அவர்கள் தத்தெடுத்துக்கொண்ட மழலை மொட்டுத்தான் இந்த கார்த்திக். அந்தக் குழந்தை தத்துக் குழந்தையாக பரிணமிப்பதை அவர்கள் விரும்பாத காரணத்தினால் அவ்வூரைவிட்டு வெளியேறி, வேறு ஊரில் குடியமர்ந்தனர். அவர்களது வாழ்க்கைக்கு ஓர் அர்த்தம் பிறந்துவிட்ட பூரிப்பில் இருவரும் தம் துயரை மறந்து வாழ்ந்தனர். இருவரது காலமும் அக்குழந்தையைப் பராமரிப்பதில் கழிந்தது.

ஆசை ஆசையாக அக்குழந்தைக்குச் செய்யும் அனைத்து கடமைகளிலும் பேரின்பம் கண்டனர். மூன்றாம் வயதில் நேசரியில் சேர்த்த பிறகுதான் மற்றைய குழந்தைகளுக்கும், இக் குழந்தைக்கும் செயல்களில் உள்ள வித்தியாசம் புரிய ஆரம்பித்தது. நாளுக்கு நாள் அந்த வேறுபாடு அதிகரித்தது. படிப்பு, விளையாட்டு எதிலுமே இக்குழந்தையின் ஈடுபாடில்லாத தன்மை குறித்து அடிக்கடி ஆசிரியர்கள் தங்களது முறைப்பாட்டை முன்வைத்தனர். மற்ற பிள்ளைகளின் பொருட்களைக் கேட்டு அடம்பிடிப்பது, கோபங்கொண்டால் கட்டுப்படுத்த முடியாமல் மற்றைய குழந்தைகளை கையில் கிடைத்தவற்றால் தாக்குவது போன்ற செய்கைகளால் மற்றக் குழந்தைகளின் பெற்றோர்கள் பெரிதும் கவலையடைந்தனர். இதனால் கார்த்திக்கை அந்த நேசரியைவிட்டு விலக்கினர்.

அந்த ஒரு வருடத்துக்குள் நான்கு நேசரிகளில் சேர்த்துவிட்டு விலக்கினார்கள். மற்றைய நேசரிகளிலும் அவனைப் பொறுப்பேற்கவில்லை. இதனால் மனமுடைந்து போனவர்களுக்கு கடைசியாக ஒரு டாக்டரிடம் பரிசோதனைக்குட்படுத்திப் பார்த்தால் என்ன எனத்தோன்றியது. அவனைப் பரிசோதித்த டாக்டர் கூறிய தகவல்தான் அவர்களை இப்படி அதிர வைத்தது. நம்பவும் முடியாமல் இருந்தது. ஆனாலும் நம்பித்தானே ஆகவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக் குழந்தையைச் சுமந்தவள் அவனைக் கருவில் அழிப்பதற்காக பல முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறாள். அந்த முயற்சிகள் யாவிலும் தோல்வி கண்ட நிலையிலேயே குழந்தையைப் பிரசவித்திருக்கிறாள். அது வேண்டாத குழந்தையாக இருந்த போதிலும், எங்காவது உயிரோடு வாழட்டும் என்ற தீர்மானத்தில் மக்கள் செறிந்து வாழும் இடத்தில் அக்குழந்தையைப் போட்டுவிட்டுப் போயிருக்கிறாள். ஆயினும் அவளது ஈவிரக்கமற்ற, மனிதாபிமானத்துக்கு அப்பாலான அந்த ஈனச் செயல்களினால் அக்குழந்தை எந்தளவில் பாதிக்கப்பட்டிருக்கிறது. அக்குழந்தையின் வளமான எதிர்காலம் எந்தளவில் சிதைந்து போயுள்ளது என்பதை அந்தத் தாய் அறிந்திருக்க நியாயமில்லை. அந்தத் தாய் ஒருவேளை உயிரோடு இருக்கலாம். இருந்தால் அவள் அருகில் இருக்கிறாளா? அல்லது தூரமாகி அந்தக் குழந்தையைக் கண்காணிக்கிறாளா என்பது அவர்களுக்குத் தெரியவில்லை. அல்லது அக்குழந்தையை வாழ விட்டுவிட்டு தனது உயிரை மாய்த்துக் கொண்டாளா என்பதுவும் புரியவில்லை.

எது எப்படிப் போனாலும் இன்று அது ஒரு பரிதாபத்திற்குரிய குழந்தை. தலையில் மூளைக்குச் செல்ல வேண்டிய நரம்பு மண்டலங்களின் பிரதான நரம்பு செயலற்றுப் போயுள்ளதாம். அதை சத்திர சிகிச்சை மூலமாக குணப்படுத்த முயற்சித்தால் அக்குழந்தையின் உயிருக்கு ஆபத்தாக முடியலாம் என்பதுதான் வைத்தியர் சமர்ப்பித்த அறிக்கை.

இதை எப்படித் தாங்குவது? இருவருமே தவித்து நின்றனர்.

பின்னாலிருந்து கேட்ட சத்தத்தில் மேலும் அதிர்ந்தவனாக திரும்பிப் பார்த்த அருண் மிகவும் தளர்ந்து போனான். நிலா மூர்ச்சையாகி விழுந்து கிடந்தாள்.

உடனடியாக அருகில் இருந்த நேர்ஸிங் ஹோமுக்கு நிலா எடுத்துச் செல்லப்பட்டாள். கடுமையான வரட்சியில் உலர்ந்து போயிருந்த பூமாதேவி, திடீரென பொழிந்த வான் மழையில் பொங்கிப் பூரித்துப் போயிருந்த வேளையில், மீண்டும் ஏற்பட்ட பூமியதிர்ச்சியைப் போல ஆகிப் போனது அருணின் மனோ நிலை.

நேர்ஸிங் ஹோம் பெஞ்சில் துவண்டு போய்க் கிடந்தவனை நோக்கி வந்து கொண்டிருந்தார் நிலாவைப் பரிசோதித்த டாக்டர். வேதனையோடு நோக்கிய அருணை புன்னகையோடு பார்த்து கைகுலுக்கி வாழ்த்துக் கூறியது அருணுக்கு வியப்பை அளித்தது.

ஆம்... நிலா தாயாகப் போகிறாளாம். அது ஓர் இன்ப அதிர்ச்சி. நம்பவே முடியாத பேரதிர்ச்சி. உடனே புத்துயிர் பெற்றவனாக ஓடிச்சென்று கார்த்திக்கை அள்ளியெடுத்து அணைத்து முத்தமிட்டான் அருண்.

உன் அம்மாவுக்கு நீ வேண்டாத குழந்தை. ஆனால் எங்களுக்கு நீ ஒரு அதிர்ஷ்டம்டா. நீ வந்த அதிர்ஷ்டம் தானடா இது என அவனது உள்ளம் ஆனந்தக் கண்ணீரைப் பொழிந்தது!!!

(முற்றும்)





# ரமழான் வந்ததே!

இரு விழி சிந்திட
இருகரம் ஏந்திடு..
இருதயம் உள்ளே
இறையொளி கொடுப்பான்..

ரமழான் அதற்காய்
வரமாய்க் கிடைத்ததே
இறைவா இதற்காய்
சிரம் நான் பணிகின்றேன்..

யா அல்லாஹ்!
கரைகள் இல்லா
உன் அன்பில்
கரைந்திடும் – எம்
பாவக்கறைகள்
குறைவே இல்லா
உன் அருளால்
குறைந்திடும் – எம்
சோகச் சுமைகள்

இருளில் கூட
ஒளிரும்
உன் திருமறை
எங்கும் எங்கும்!

இரவும் நீ தந்தாய்
பகலும் நீ தந்தாய்
வானில் சுடர் நீ தந்தாய்
வாழ நீர் தந்தாய்
உண்மை பார்க்கத்தான்
இமைக்கும் விழி தந்தாய்
நன்மை ஆற்றத்தான்
ரமழான் நீ தந்தாய்!

இதயம் தன்னில் உள்ள
எண்ணம் நீ அறிவாய்..
உள்ளம் ஒன்று சொல்லும்
உதடு வேறு பேசும்
கயவர் நீ அறிவாய்..

எல்லோரும் ஒன்று கூடும்
மறுமை மஹ்ஷர் தன்னில்
பகலோன் வெப்பம் நீங்க
நிழலாய் உந்தன் அர்ஷை
ரமழான் தன்னில் கேட்டு
பணிந்தோம் சிரமே தாழ்த்தி!!!

■ புத்தளம் ஜுமானா ஜுனைட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன கவிதையோட்டமும்... அதன் பின்னணியும்...

நாச்சியாதீவு பர்வீன்

கவிதை என்பது ஒரு அனுபவப் பகிர்வு என்கிறார் டால்ஸ் டாய். நாம் சேர்த்து வைத்த அனுபவங்களை பகிர்ந்துகொள்ளும் நல்ல தளமாக கவிதையை நாம் கையாள்கிறோம். அந்த வகையில் டால்ஸ் டாயின் இந்த கருத்துகளோடு உடன்படாமல் இருக்க முடியவில்லை, எப்படியோ கவிதை பற்றிய முரண்பாடான வரைவிலக்கணங்கள் மொழி ஆய்வாளர்கள் மத்தியில் இன்றுவரைக்கும் இருந்துகொண்டே இருப்பது நாமறிந்த உண்மையாகும. ஒரு நல்ல கவிதை நல்ல கவிஞனை அடையாளப்படுத்துகிறது. அந்த வகையில் இன்றுகளில் கவிதை ஒரு தளத்திலிருந்து இன்னொரு தளத்தை நோக்கிய பாய்ச்சலை கொண்டுள்ளது எனலாம்.

பொதுவாக ஒரு பிரதேசத்தில் வாழுகின்ற கவிஞன் தான் வாழுகின்ற சூழலில் கண்டதையும் கேட்டதையும், அனுபவித்ததையும் தனது கவிதைக்கூடாக பதிவாக்குகின்றான். மெய்யிலேயே அதுதான் யதார்த்தமும்கூட. ஆராம்பகால அரேபிய கவிஞர்கள் தாம் நாடோடிகளாக அலைந்து திரிந்த காலத்தில் கவிதைகளை பாடிவந்தனர். அது நபாதிய கவிதைகள் என இன்றுகளில் அடையாளம் காணப்படுகிறது.

தமது வறுமையையும், அலைச்சலையும், அன்றாடம் படும் கஷ்டங்களையும் இவர்கள் தமது கவிதையின் பாடுபொருளாக கொண்டிருந்ததாக அரேபிய இலக்கிய வரலாறு கூறுகிறது. அது மட்டுமல்லாது தமது பரம்பரை வரலாறுகளை அடுத்த பரம்பரைக்கு ஊடுகடத்த இந்த வாய்மொழிக் கவிதையியலை பயன்படுத்தினர். தங்கள் குலப்பெருமையை பாடல் வடிவில் எழுதி ஆங்காங்கே தொங்கவிடுவதும் அரேபியரின் பண்பாக இருந்தது.

அவ்வாறே ரஷ்யப் புரட்சியின் போதுகளில் முதலாளி வர்க்கத்திற்கு எதிரான கவிதைகள் உருப்பெற்றன. அவைகள் மனதை கொள்ளை கொள்ளும் வசனங்களாக, கோஷங்களாக அமைந்திருந்தன. இரண்டாம் உலக மகா யுத்த காலத்தில் அமெரிக்க எதிர்ப்பு கவிதைகள் உலகெங்கிலும் புகழ் பெற்றன. அதேபோல ஈராக்கில் அமெரிக்காவின் கெடுபிடிகளும் அடாவடித்தனங்களும் அதிகரித்த போது இந்த ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வு மேலோங்கிய கவிதைகள் பரவலாக வெளிவந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கையிலும் உள்நாட்டு யுத்த கெடுபிடியில் சிக்கியவர்கள் ஊர் இழந்து, உறவிழந்து அல்லல்பட்டு கண்ணீர் சிந்திய போதுகளில் கவிதை எனும் ஆயுதம், காயங்களுக்கு மருந்தாகவும் தமதான அவலங்களை வெளிப்படுத்தும் மிக நுணுக்கமான சாளரமாகவும் இந்தக் கவிதை இயல் அமைந்தது.

போரியல் அவலங்களை, அனுபவங்களை, இழப்புகளை, இன்னல்களை சுமந்த ஆயிரம் ஆயிரம் கவிதைகள் போர் காலத்தில் எழுந்தன. இடையில் முஸ்லிம்களின் இருப்பு கேள்விக்குறியாக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் முஸ்லிம் தேசியத்தை வலியுறுத்தும் கவிதைகளும் அவ்வப்போது பரவலாக எழுந்தன. ஆக கால ஓட்டத்தில் அவ்வவ் காலத்தில் வாழ்ந்தவர்கள் தாம் வாழ்ந்த கால அனுபவங்களை கவிதைக்கூடாக பதிந்துள்ளனர்.

ஆனால் பெண்கள் பொதுவாக தாம் வாழ்நிலைச் சூழலை பாடினாலும் அவர்களைச் சுற்றி ஆண்களாலும், சமூகத்தாலும் பின்னப்பட்டுள்ள தகர்க்க முடியாத வேலி பற்றியே அனேகமாக எழுதியுள்ளனர். அந்த வகையில் இலங்கைப் பெண்கள் பலரது கவிதைகளை இதற்கு எடுகோள்களாக காட்ட முடியும்.

இது தவிர சாதியத்திற்கு எதிராக பொதுவான குரலாக இன்று வரைக்கும் எழுகின்ற கவிதைகளையும் புறம் தள்ள முடியாத நிலையில்தான் கவிதை எனும் திறந்த வெளி அமைந்துள்ளது.

வெம்மையில் கருகி
வேர்வையெல்லாம் சிந்தி
சீமையில குப்பையள்ளும்
யார் நாம் இரங்கா மனிதர்கள்
..................................................
..................................................

வறண்டு போய் நா
நெஞ்சு வரை காய்ந்து போகும்
திறந்து வந்து தண்ணீர் தர
இஞ்சயா நக்கீரமுண்டு
..................................................
..................................................

இரத்தம் சுண்டி கறுத்திட்டு
இழி சாதி மட்டும் எச்சம்
வருத்தம் என்றாலும்
வசந்த காலம் வரும் ஒரு நாள்

(நன்றி- கவியில் உறவாடி)

இந்தக் கவிதையில் மன்னாரை சேர்ந்த பஸ்டினா ரமேஷ் சாதியத்தின் கெடுபிடிகளையும், அதனால் சாதியில் குறைந்தவர்கள் படுகின்ற அவஸ்தைகளையும் அழகாக படம்பிடித்துக் காட்டுகிறார். வருத்தம் என்றாலும் வசந்த காலம் வரும் ஒரு நாள் என்கின்ற இந்தத் தலைமுறையின் நம்பிக்கையை விதைக்கிறார் கவிஞர். அவர் வாழுகின்ற சூழலானது சூழலில் நடக்கின்ற சாத்திய அடக்கு முறையின் அடையாளமாக இதனை கொள்ள முடியும்.

குஞ்சை தூக்கி கொஞ்சி
சுமந்து திரிகிறாய்
விளையாட்டு வார்த்தைகள் பேசுகிறாய்
துள்ளிக்குதித்து
விளையாடுகிறாய்
....................................
....................................

பூனை காகம் பிடித்திடுமோ
என்று பயப்படுகிறாய்
இதே பயம் தான்
உன்னை நெஞ்சில்
சுமப்பதன் போதும்
என்பதை எப்படி சொல்வேன் மகளே?
....................................
....................................

(நன்றி- கவியில் உறவாடி)

தனது பிஞ்சு மகள் பற்றிய தனதான அவதானத்தை பதிந்துள்ளார் கெக்கிராவ சஹானா. இந்தக் கவிதை மூலமும் அவர் தான் வாழும் சூழலை அழகாக படம் பிடித்துக் காட்ட முனைகிறார்.

சுற்றி ஓநாய்களும், நரிகளும்
சூழ்ந்திருக்கும் காட்டில்
ஒரு மெல்லிய குஞ்சை
தூக்கிக் கொண்டு
நடப்பதன் கஷ்டம்
உனக்கு புரிகிறதா?

என்கின்ற வார்த்தைகள் தம்மை சூழ வாழுகின்ற மனிதர்களின் குணாதிசயங்களை காட்டுகிறது. ஆக தாம் வாழுகின்ற சூழலின் தன்மைக்கேற்ப கவிதையின் பாடுபொருள் வித்தியாசப்படுகிறது. கவிதையியலின் பின்னணியின் மாற்றங்களை தீர்மானிப்பதில் நாம் வாழும் சூழலுக்கும் முக்கிய பங்கு இருப்பது புலனாகின்றது!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இடப்பெயர்வு

வானமுற்றத்தில் மிதக்கின்ற
கனவுப் பறவையின்
இதிகாசங்களில்
இன்னும் அழிக்க முடியாத
கறுப்பு வலையங்கள்

சூரிய மச்சங்களிலிருந்து
விழுந்த எதிர்பாராத
அபார அதிகார எச்சங்களால்
பறவைகளின்
நிலையறுந்து போயிற்று
சுதேச மரங்களில்
கூடுகட்டிய எல்லாப் பறவைகளின்
குஞ்சுகளையும்
காக்கைகளும் பருந்துகளுமாய்
காவிச் செல்ல
காடே இருட்டாகி
பின் பாலைவன தேசமாகி
கிடக்கின்றது

கடைசியில்
கனவுப் பறவைகள்
காட்டை மறந்து
வானமுற்றத்தில்
இருக்கின்றன
அருவறுப்புக்களும்
அவஸ்தைகளும்
இன்னும் சிலவற்றினதும்
கால முடிச்சை விழுங்கியபடி!!!

# நட்பு

தூசு கவிழ்ந்த
ஸ்பரிச நீட்சியில்
நாட்காட்டி சிறகசைக்க
காலச்சுவரில்
எழுதப்பட்ட எழுத்துக்கள்
ஒவ்வொன்றும்
நீர்ச்சுனை மீது
ஓவியமாய் அலைகின்றது
அழிக்க முடியாத நட்பின்
வரைவிலக்கணங்களைத் தவிர
அனைத்தும் காலாவதியான
செய்தியாகவே
உனக்கும் எனக்கும்
நிழலாகின்றது!!!

எல். வஸீம் அக்ரம்

# உதவி வாழ்ந்திடு

**உருவகக்கதை**

மருதூர் ஜமால்தீன்

மிகவும் கவலையோடும் சோகத்துடனும் பார்த்துக் கொண்டிருந்தது அந்தத் தாய்க்கோழி. தான் பல நாட்களாக அடைகாத்து வளர்த்து வரும் தனது குஞ்சுகளில் ஒன்றை அந்தக் காகம் கொத்தித் தூக்கிக்கொண்டு போனது மட்டுமல்லாமல் தன் கண்முன்னாலேயே துடிதுடிக்க கொத்தி உண்பதை அதனால் சகிக்க முடியாமலிருந்தது.

இந்தக் காக்கைக்கு நான் என்ன அநியாயம் செய்தேன்? எத்தனையோ விதமான உணவுகள் எங்கெல்லாமோ வீணாய்ப் பரவிக் கிடக்கும்போது எனது குழந்தைக் குஞ்சொன்றையல்லவா காகம் தூக்கிச் சென்றுவிட்டது என்ற கவலையால் ஏனைய குஞ்சுகளை கொக்... கொக்... என்று அழைத்து தனது வயிற்றுக்குள் அணைத்துக்கொண்டு அந்தக் காகம் இன்னும் பல காகங்களுடன் தனது கோழிக் குஞ்சை உண்பதையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தது.

அந்தக் காகமோ தான் கொத்திச் சென்ற கோழிக் குஞ்சை உண்டு முடித்து தனது அலகை மரத்தில் தேய்த்து தலையை உயர்த்தி கா... கா... என்று கத்தி ஏப்பமிட்டுவிட்டு மீண்டும் கோழிக் குஞ்சுகள் தன் தாயிடம் படுத்திருக்கும் மரத்தினடியில் அந்தத் தாய்க்கோழியையும், குஞ்சுகளையும் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தது.

கவலையுடனிருந்த அந்தத் தாய்க்கோழி பொறுக்க முடியாத கோபத்துடன் அந்தக் காகத்தைப் பார்த்துப் பேச ஆரம்பித்தது.

"ஏய்... கிழட்டுக் காகமே! நான் எவ்வளவு துரத்தியும் அதையும் மீறி எனது குஞ்சுகளிலொன்றை கொத்தித் தூக்கிச் சென்றது மட்டுமல்லாமல் எனது கண் முன்னாலேயே துடிதுடிக்க உண்டுவிட்டு மீண்டும் வந்து என் முன்னால் அல்லவா நிற்கிறாய். உனக்கு எவ்வளவு தைரியம்? எனது கூட்டுக்குள் ஒரு நாளில் தீண் உண்ண வருவாய்தானே அப்போது நான் உன்னைக் கவனித்துக் கொ(ல்)ள்கிறேன்" என்றது.

தாய்க்கோழியின் பேச்சைக் கேட்ட காகம் பதில் கூற ஆரம்பித்தது.

"ஏய்.. கோழியே... உனது குஞ்சுகளாயிருந்தாலும் சரி எனது உணவை நான் அப்படித்தான் பெற்றுக்கொள்வேன். யாருடைய உயிர்களைப் பற்றியும் எனக்கு கவலையில்லை. அதிகம் முறைக்காதே" என்று கூறியது.

அதைக் கேட்ட தாய்க்கோழி "ஏய்.. அநியாயக்காரனே! எனது குஞ்சைக் கொலைசெய்து உண்டது மட்டுமல்லாமல் எவ்வளவு அலட்சியமாகப் பேசுகிறாய், நாங்கள் வீட்டு எஜமானி தரும் உணவை உண்டுவிட்டு





வளவுக்குள் கிடக்கும் சிறு உணவுப் பருக்கைகளை கிளறி உண்டு எவருக்கும் உபத்திரவமில்லாமல் வாழ்ந்து வருகிறோம். ஆனால் உனக்கு இறைவன் எங்களைவிட பறக்கும் சக்தியைத் தந்திருக்கிறான். எத்தனையோ இடங்களில் உணவுகள் வீணாகக் கொட்டிச் சிதறிக்கிடக்கிறது. அங்கெல்லாம் தேடிப் பறந்து உண்பது மட்டுமல்லாமல் உயிரினங்களைக் கொன்றும் உண்ண வேண்டுமா? அது பாவமில்லையா?" என்று கேட்டது அந்தத் தாய்க்கோழி.

காகம் அதற்கு "நீ கூறுவதை ஒருவகையில் ஏற்றுக் கொண்டாலும் நீ மட்டும் சுத்தமானவன் போன்றல்லவா கதைக்கிறாய். பூமியில் ஊர்ந்து திரியும் சிறு சிறு பூச்சி வகைகளைக் கொத்தி உண்ணுகிறாயே அது பாவமில்லையா? என்று கேட்டது.

காகத்தின் கூற்றுக்கு செவிசாய்த்த தாய்க்கோழி சிறிது நேர மௌனத்தின் பின் "ஏய் காகமே நாங்கள் சிறு பூச்சிகளை உண்டாலும் அதில் ஒருவகை நியாயமிருக்கிறது. ஏன் தெரியுமா? மனிதர்களுக்கு இடையூறு விளைவிக்கக் கூடிய பூச்சி வகைகளை அவர்களின் வீடுகளில் காணும்போது அதனையே உண்கிறோம். ஆனாலும் நாங்கள் மனித இனத்திற்கு உதவியாகத்தான் இருக்கிறோம். முட்டையிட்டுக் கொடுப்பது அந்த முட்டைகளை அவர்கள் அடைவைத்தால் பொரித்துக் குஞ்சாக்கி அவை வளரும்போது உணவாக்குவது அல்லது எங்களை விற்பனை செய்வது போன்ற எந்த வகையில் என்றாலும் நாங்கள் மனிதர்களுக்கு உதவி செய்பவர்களாகத்தான் இருக்கிறோம்" என்று கூறிய கோழி மீண்டும் சற்று ஆவேசமாகப் பேச ஆரம்பித்தது.

"உனது இனத்தால் மனித சமூகத்திற்கு உதவி என்பதைவிட, அநியாயமும் தொல்லைகளும்தான் அதிகம். மனிதர்களின் வீடுகளிலேயே கூடுகட்டி நீ குஞ்சு பொரிப்பது மட்டுமல்லாமல் அவர்களின் உணவைப் பறித்துண்பது, திருடியுண்பது, அவர்கள் அருந்தும் நீர் நிலைகளை அசுத்தமாக்குவது, அவர்கள் அன்போடு வளர்க்கும் எங்களது குஞ்சுகளைத் தூக்கிச் செல்வது, சிறிய உயிரினங்களைக் கொல்லுவது போன்ற அநியாயங்கள் செய்வது உனது இனத்தில் மிகைத்ததனால் தான் இறைவன் உன் இனங்களைக் கறுப்பு நிறமாகப் படைத்தான் போலும்.

அது மட்டுமா? நாங்கள் வாழ்ந்தாலும், இறந்தாலும் பிறருக்குப் பயன்படுகிறோம். உனது இனத்தவர்கள் இறந்தால் உலகிலுள்ள எந்த உயிரினமாவது உண்ணுகிறதா என்று பார்த்தால் அதுவும் இல்லை. உதவாக் கரையாக உலகத்தில் வாழக் கூடாது. வாழ்ந்தால் நாம் எந்த வகையிலாவது பிறருக்கு உடலாலோ உழைப்பாலோ உதவியாக வாழனும். இல்லையென்றால் நாம் வாழ்வதற்குத் தகுதியற்றவர்கள்" என்று ஒரு குட்டிப் பிரசங்கமே செய்தது.

தாய்க்கோழியின் பேச்சிலுள்ள உண்மைகளை விளங்கினாலும் தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்று வாழும் காகத்தால் பதில் கூற முடியாத அவமானத்தால் கா... கா... என்று கரைந்து அவ்விடத்தைவிட்டும் பறந்து சென்றது!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிரொலி

எதிர்பார்ப்புக்கள் ஏதுமின்றி
நானிருந்தபோது
எனக்கு வைரமாக
நீ கிடைத்தாய்..
வைரத்தின்
பெறுமதி நான் அறிகின்றபோது
என்னைவிட்டுப் பிரிந்தாய்!

பல கேள்விகள் உண்டு
என்னிடம் - அங்கு
விடைகள் உண்டா உன்னிடம்?

நீ
என் நினைவுகளின்
ஆணி வேராகிப் போனதாலா
எண்ணங்கள் யாவும்
உன்னைப் பற்றியே
கிளை விரித்திருக்கின்றன?

காலத்தின் கட்டாயங்களுக்கு
கட்டுப்பட்டு - நீயும்
சிந்தித்துக் கொண்டிருக்கிறாயா
என்னைப் போலவே?

உன்னை மறக்க வேண்டும்
என்ற உண்மையை மட்டும்
அடிக்கடி
நினைத்துக் கொள்கிறேன்..
அங்கும் உன் நினைவுகளே
உந்தப்படுகின்றன!

எனது ஒவ்வொரு
சிறிய வெற்றிக்குமான - உனது
முதலாவது கைதட்டல்
இன்று எனக்கு கேட்கவேயில்லை!

வார்த்தைகளில் வடிக்கவியலா
எனது துன்பங்களை
பெருமூச்சுக்களாய்
மொழிபெயர்த்திருக்கிறேன்..

பாறையில் எதிரொலிக்கும்
என் துயரக்குரல்
என்றோ ஒருநாள்
உனக்குக் கேட்கும்
என்ற நம்பிக்கையில்!!!

**நிலாக்குயில்**





# பூங்காவனம் பற்றி வாசகர்கள்

பூவையர் கைவண்ணம் கொண்டிலங்கும்
பூங்காவனம் புதுமலர்கள்
பாவையர் புகழ் கூறி பாரெங்கும்
பரவி மணம்வீச என்றும் - இப்
பாவலனின் வாழ்த்துக்கள் உரித்தாகும்!

**பி.ரி. அஸீஸ் - கிண்ணியா**

பூங்காவனம் இதழ் 8 ஐ பார்வையிட்டேன். மிகவும் சந்தோஷம். இக்ராம் எம். தாஹாவின் வழிகாட்டிகள், ஜரீனா முஸ்தபாவின் சமூகமே உணர்வாயா? என்ற இரு சிறுகதைகள் எனது மனதைத் தொட்டன. முதல் கதையில் பெற்றோர் விடும் தவறுகள் குழந்தைகளை எப்படிப் பாதிக்கும் என்பதை உணர்த்தியது. தகப்பன் பொறுப்பற்ற குடிகாரன். மகன் பணம் களவெடுக்கிறான். நல்ல காரியத்திற்காக என்றாலும் அந்தத் தவறை செய்யத் தூண்டியது தகப்பனின் பொறுப்பற்ற நடத்தைதான்.

இரண்டாவது கதை இயல்பாகவே பெண்களுக்கு இருக்கும் எச்சரிக்கை உணர்வை படம் பிடித்துக் காட்டியது. இது இல்லாவிடில் பெண்கள் வீண் ஆபத்துக்களுக்கு ஆளாக வேண்டிவரும் என்பதை உணர்த்தியது. மேலும் கணவன் கவனிக்காத தவறை கவனித்து தக்க சமயத்தில் மனைவி புலப்படுத்துகிறாள். எழுத்தாளர்கள் இருவரும் பாராட்டுக்குரியவர்கள். பூங்காவனம் இதழை பல தரப்பினரும் வாசிப்பதால் இதுபோன்ற நல்வழிக் கதைகளை மேலும் பிரசுரிக்கவும். வாழ்த்துக்கள்!

**எஸ்.ஆர். பாலசந்திரன்**

இதுவரை எட்டு இதழ்களை வெளியிட்டு தடம் பதித்து நிற்கும் பூங்காவனம் ஆசிரியர் குழுவுக்கு முதலில் என் நன்றிகள். கலை இலக்கிய வளர்ச்சிக்கு முன்னோடி இதழாக விளங்கும் பூங்காவனம் சஞ்சிகை, இலைமறை காய்களாக இருக்கும் அனைத்து கலை நெஞ்சங்களுக்கும் உதவியாக இருக்கின்றது.

நேர் சந்திப்பு, கட்டுரை, கவிதைகள், சிறுகதைகள் என சமுதாயத்துக்கு தேவையான விடயங்களை ஏந்தி நிற்கின்றன. அத்தனை விடயங்களும் இதழை மிகவும் அலங்கரிக்கின்றன. பூங்காவனம் இதழுக்கு எனது பாராட்டுக்கள்!

**மொஹமட் அஸாம் - அலுப்பொத்த.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலகப்பூங்கா



நூலின் பெயர் - செந்நீரும் கண்ணீரும்
நூலின் வகை - சிறுகதை
நூலாசிரியர் - சீனா. உதயகுமார்
தொலைபேசி - 078 3015144
வெளியீடு - ஐங்கரன் பதிப்பகம்
விலை - 250 ரூபாய்



நூலின் பெயர் - இஸ்லாமிய கீதங்கள்
நூலாசிரியர் - கவிஞர் மருதூர் ஜமால்தீன்
தொலைபேசி - 075 2798958
விலை - குறிப்பிடப்படவில்லை



நூலின் பெயர் - மௌனமாய் இருக்க முடியாமல்
நூலின் வகை - கவிதை
நூலாசிரியர் - பெ. புண்ணியமூர்த்தி
தொலைபேசி - 077 1155609
வெளியீடு - மக்கள் கலை இலக்கிய ஒன்றியம்
விலை - 100 ரூபாய்



நூலின் பெயர் - கனவுகளுக்கு மரணம் உண்டு
நூலின் வகை - கவிதை
நூலாசிரியர் - ஏ. நஸ்புள்ளாஹ்
தொலைபேசி - 077 6751510
வெளியீடு - புன்னகைப் பதிப்பகம்
விலை - 450 ரூபாய்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நூலின் பெயர் - இன்பத்தமிழும் இனிய நிலமும்
நூலின் வகை - கவிதை
நூலாசிரியர் - பொன். தவநாயகம்
வெளியீடு - மணிமேகலைப் பிரசுரம்
விலை - 60 ரூபாய் (இந்திய விலை)



நூலின் பெயர் - உயிர்த்தெழச் சொல்லுங்கள்
நூலின் வகை - கவிதை
நூலாசிரியர் - செ.ஜெ. பபியான்
தொலைபேசி - 072 3584936
வெளியீடு - சாரல் வெளியீட்டகம்
விலை - 150 ரூபாய்



நூலின் பெயர் - போரும் மனிதனும்
நூலாசிரியர் - அனிஸ்டஸ் ஜெயராஜா
தொலைபேசி - 077 5441098
வெளியீடு - பூங்காற்றுப் பதிப்பகம்
விலை - 100 ரூபாய்



நூலின் பெயர் - புதா சுகமா
நூலின் வகை - சிறுவர் நாவல்
நூலாசிரியர் - கே.எம்.எம். இக்பால்
தொலைபேசி - 026 2236931
வெளியீடு - லங்கா புத்தகசாலை
விலை - 150 ரூபாய்



நூலின் பெயர் - துயரம் சுமக்கும் தோழர்களாய்
நூலின் வகை - கவிதை
நூலாசிரியர் - குறிஞ்சிவாணன்
வெளியீடு - விபிஎம் வெளியீடு
விலை - 125 ரூபாய்




நூலின் பெயர் - அவாவுறும் நிலம்
நூலின் வகை - கவிதை
நூலாசிரியர் - முல்லை முஸ்ரிபா
வெளியீடு - வெள்ளாப்பு வெளி
விலை - 200 ரூபாய்



நூலின் பெயர் - தாலாட்டுப் பாடல்
நூலாசிரியர் - பி.ரி. அஸீஸ்
தொலைபேசி - 075 2101556
விலை - குறிப்பிடப்படவில்லை



நூலின் பெயர் - நெருப்பு வாசல்
நூலின் வகை - சிறுகதை
நூலாசிரியர் - அன்புடீன்
வெளியீடு - பெருவெளி பதிப்பகம்
விலை - 300 ரூபாய்



## திருமதி. ஏ.சி. ஜரினா முஸ்தபா எழுதிய நூல்கள் விற்பனைக்கு உண்டு!!!

01. விறுவிறுப்பு நிறைந்த திகிலூட்டும் நாவல்

**"ஓர் அபலையின் டயரி"** (விலை 200/=)

02. ஒரு பெண்ணின் கண்ணீர்க் காவியம். சர்வதேச போட்டியில் பரிசு பெற்ற விறுவிறுப்பான நாவல். அத்துடன் வாழ்க்கைக்குத் தேவையான பல படிப்பினைகளை இந்த நாவலினூடாகப் பெற்றுக் கொள்ளலாம்.

**"இது ஒரு ராட்சஷியின் கதை"** (விலை 250/=)

03 நீங்கள் ஜின் ஷைத்தான்களால் பாதிக்கப்பட்டவரா? அப்படியானால் இன்றே இந்நாவலை வாசியுங்கள்.

**"37ம் நம்பர் வீடு"** (விலை 250/=)

(பயந்த சுபாவம் உடையோர்கள் இதை வாசிப்பதைத் தவிர்க்கவும்)

04. படிக்கும் மாணவ மாணவிகளுக்கு படிப்பினைகளைத் தரக்கூடிய சிறுவர் கதைத் தொகுதி

**"ரோஜாக் கூட்டம்"** (விலை 150/=)

## இந்த நூல்கள் கிடைக்கும் இடங்கள்

பூபாலசிங்கம் புத்தகசாலை - கொழும்பு 11.
ஹாதி புக் டிப்போ - கொழும்பு 11.
இஸ்லாமிக் புக் ஹவுஸ் - கொழும்பு 09.
இஸ்லாமிக் புக் சென்டர் - கொழும்பு 09, அக்குரனை.

வீட்டிலிருந்து புத்தகங்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களுக்கு தபால் செலவு இலவசம். நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்:-

ஏ.சி. ஜரீனா முஸ்தபா - தபாலகம் 'வெளிவிட்ட' என மணியோடர் எடுத்து கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

A.C. JAREENA MUSTHAFA,
NO. 120/ H, BOGAHAWATTE ROAD,
WELIVITA, KADUWELA.
TELEPHONE - 0115020936, 0115050983.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments From...

Luckyland




# LUCKYLAND BISCUIT MANUFACTURERS

NATTARANPOTHA, KUNDASALE, SRI LANKA.
TEL - 0094 - 081 - 2420574, 2420217. FAX - 0094 - 081 - 2420740
Email - luckyland@sltnet.lk

9772012670007

Designed By - H.F. Rizna

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org